மத்திய கலாசார நிதியம்

நோக்கம்

இலங்கையின் கலாசார விழுமியங்களை

சர்வதேச அதிசயங்களாக உருவாக்குதல்

செயற்பாடுகள்

இலங்கையின் கலாசார உரிமைகள் தொடர்பான

ஆய்வுகள், பேணிப் பாதுகாத்தல், மறுசீரமைத்தல், அபிவிருத்தி, ஊக்குவித்தல் போன்றவற்றை மேற்கொண்டு

கலாசாரங்களுக்கான நிரந்தர பொருளாதார சாதனைகள் புரிவதன் மூலம்

கீழைத்தேய கலாசாரங்களின் முகாமைத்துவம்

தொடர்பான

மிக முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பை ஏற்ற நிறுவனமாக அமைதல

மத்திய கலாசார நிதியத்தின் பணிகளும் குறிக்கோள்களும்

- கலாசார முக்கோணத்தினுள் இருக்கும் கலாசார நினைவுச் சின்னங்கள் மற்றும் கலாசார முக்கோணத்திற்கு வெளியே மக்களின் நன்மை கருதி அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள ஏதேனும் பிரதேசத்திலுள்ள நினைவுச் சின்னங்கள் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கான செலவுகளை மேற்கொள்ளுதல்.
- ஜேத்தவன தாதுகோபுரத் திட்டத்திற்கு மற்றும் அதே போன்ற வேறு திட்டங்களுக்கான முழுச் செலவுகளையும் மேற்கொள்ளுதல்.
- இலங்கையினுள் அல்லது வெளிநாடுகளில் சமயம் தொடர்பான பணிகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
- சமயங்களின் மேம்பாட்டிற்காகவும், வழிபாட்டுத் தலங்கள், வழிபாட்டு சம்பிரதாயங்கள் ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்வதற்காகவும் உதவிகளை வழங்குதல்.
- கலாசார மற்றும் சமயத் துறையில் நாட்டிற்காகச் சேவையாற்றுபவர்களுக்கான விருதுகள் வழங்குதல்.
- கலைஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஓவியர்களுக்கும், சங்கீதக் கலைஞர்களுக்கும், சிற்பக் கலைஞர்களுக்கும் மற்றும் கலாசார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக சேவையாற்றுபவர்களுக்கும் உதவிகள் வழங்குதல்.
- சபையின் அபிப்பிராயப்படி, மக்களுக்கு நற்பலன்களையளிக்கும் நற்காரியங்களில் ஈடுபடுவோருக்கும், சமய கலாசாரப் பணிகளில் ஈடுபடுவோருக்கும் உதவிகள் வழங்குதல்.

மத்திய கலாசார நிதியத்தின் முப்பத்தோராம் ஆண்டறிக்கை – 2013
நிர்வாக சபை

2013 ஆம் ஆண்டின் மத்திய கலாசார நிதியத்தின் நிர்வாக சபையினர்

நிர்வாக சபைத் தலைவர்
பிரதமர் கௌரவ தி.மு. ஜயரத்ன அவர்கள்

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க அவர்கள்
கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர்

கௌரவ கீதாஞ்சன குணவர்தன அவர்கள்
பிரதி நிதி அமைச்சர்

கௌரவ பெசில் ராஜபக்ஸ அவர்கள்
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ பந்துல குணவர்தன அவர்கள்
கல்வி அமைச்சர்

கௌரவ தி.மு. ஜயரத்ன அவர்கள்
புத்த சாசன மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர்

திரு. எஸ் அமரசேகர அவர்கள்
பிரதமரின் செயலாளர்

திரு. வசந்த ஏக்கநாயக்க அவர்கள்
செயலாளர்
கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு

கலாநிதி செனரத் திசாநாயக்க அவர்கள்
தொல்பொருளியலாளர், பணிப்பாளர் நாயகம்

கலாநிதி ஜகத் பாலசூரிய அவர்கள்
தேசிய மரபுரிமைகள் அமைச்சர்

திரு. டப்ளியு.ஏ. ரணவீர அவர்கள்
செயற்பாட்டுப் பணிப்பாளர்
மத்திய கலாசார நிதியம்

மேற்பார்வை அதிகாரிகள்

திருமதி என். கொடகந்த அவர்கள்
பணிப்பாளர் நாயகம்
முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் (2013 ஏப்ரல் 10ஆந் திகதி வரை)

திருமதி. நாலினி அமரதுங்க அவர்கள்
பணிப்பாளர்
முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் (2013 ஜுன் 19ஆந் திகதிக்கு)

செல்வி ஜீ.டீ.சீ. ஏக்கநாயக்க அவர்கள்
பணிப்பாளர் நாயகம்
தேசிய வரவு செலவுத் திணைக்களம்

மத்திய கலாசார நிதியத்தின் நிர்வாக சபையினதும், பணிக்குழுவினதும் கொள்கை மற்றும் நிறுவனக் கமிட்டி தொடர்பான கூட்டங்கள் 2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டுள்ளதுடன், மத்திய கலாசார நிதியத்தின் பணிகள் தொடர்பாக கொள்கை சார்ந்த தீர்மானங்கள் மற்றும் வழிகாட்டல்கள் யாவும் நிர்வாக சபையினரால் எடுக்கப்படும் முடிவுகளுக்கமையவும், ஆலோசனைகள் மற்றும் நியதிகளுக்கமையவும் குறித்த நடவடிக்கைகள் செயற்படுத்தப்படும்.

மத்திய கலாசார நிதியத்தின் பணிக் குழு - 2013

1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச் சட்டத்தின் பிரகாரம் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர், மத்திய கலாசார நிதியத்தின் பிரதான நிர்வாக அலுவலராகக் கடமையாற்றுகின்றார். நிறுவனத்தின் தலைவராக பணிப்பாளர் நாயகம் அவர்கள் கடமையாற்றுவதுடன், மத்திய கலாசார நிதியத்தின் மிக முக்கிய மூன்று பிரிவுகளான நிர்வாகம், அபிவிருத்தி, நிதி ஆகிய பிரிவுகளுக்கு மூன்று பணிப்பாளர்கள் பொறுப்பாகக் கடமையாற்றுகின்றனர். இவ்வாறு நிதியத்தின் ஒட்டு மொத்தப் பணிகளினதும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிதியத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்காக இவ்வருடத்தினுள் கீழே காணப்படுகின்ற எண்ணிக்கையான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிரேஷ்ட நிலை முகாமைத்துவ அலுவலர்கள்	02
மூவித மட்டத்திலான முகாமைத்துவ அலுவலர்கள்	23
இருவித மட்டத்திலான முகாமைத்துவ அலுவலர்கள்	337
ஆரம்ப நிலை அலுவலர்கள்	1626
	1988

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க அவர்கள்
கலாசார மற்றும் கலைத்துறை அமைச்சர்

மத்திய கலாசார நிதியம் - 2013
சிரேஷ்ட நிலை முகாமைத்துவ அலுவலர்கள்

பிரதான நிர்வாக அலுவலர்
திரு. வசந்த ஏக்கநாயக்க அவர்கள்
மற்றும்
கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு

பணிப்பாளர் நாயகம்
சிரேஷ்ட தொல்பொருளியல் பேராசிரியர் காமினி அதிகாரி அவர்கள்

செயற்பாட்டுப் பணிப்பாளர்
திரு. டப்ளியு. ஏ. ரணவீர அவர்கள்

பணிப்பாளர் (நிதி)
திரு. டப்ளியு. பீ. சரத் அவர்கள்

பணிப்பாளர் (அபிவிருத்தி)
திருமதி. பீ. எம். ஜீ. மல்தெனிய அவர்கள்

உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)
தொல்பொருளியலாளர் திரு. காமினி தொடம்வல அவர்கள்

2013 ஆம் ஆண்டின் பௌதீக முன்னேற்றங்கள்

இலங்கையிலுள்ள தொல்பொருளியல் நினைவுச் சின்னங்களைப் பேணிப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்குக் கையளிப்பதன் நோக்கத்துடன் மத்திய கலாசார நிதியம் நிறுவப்பட்டது. மத்திய கலாசார நிதியத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் பின்வரும் கருத்திட்டங்களுள் அபயகிரித் தூபி மற்றும் ஜேத்தவனத் தூபி ஆகிய கருத்திட்டங்கள் அதிகளவான நிதி செலவு செய்யப்பட்டு, ஏற்கெனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- அபயகிரி
- ஜேத்தவன
- சீகிரியா
- பொலொன்னறுவை
- கண்டி
- திஸ்ஸமகாராம
- காலி
- ரம்பா விகாரை
- தம்புள்ளை
- வடமேல் கலாசார சதுக்கக் கருத்திட்டம் (யாபஹுவ, தம்பதெனியா, பண்டுவஸ்நுவர, குருநாகல்)
- றுஹுணு கலாசார வலயம்

இதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டில் அகழ்வுகள் மற்றும் தொல்பொருளியல் ஆய்வுகள் தொடர்பாக 88 பணி நடவடிக்கைகளதும், 193 பேணிப் பாதுகாப்பு வேலைத்தளங்கள் அமைப்பதற்கும் மொத்தமாக 281 கருத்திட்டங்களின் யோசனைகள் முன்வைக்கப்பட்டன. இவற்றுள் 243 கருத்திட்டங்களின் பணிகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றினுள்ளும் 27 திட்டங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. (11 அகழ்வுகள், 16 பேணிப் பாதுகாப்புக்கள்)

வருடத்தினுள் 147,415.21 பணிக் கூறுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் பௌதீக முன்னேற்றத்தின் அளவு 86.39 % வீதமாகும். இப்பணிகளுக்கான நேரடிச் செலவாக ரூபா 434,518,000.23 செலவு செய்யப்பட்டுள்ளது. நேரடிச் செலவுகளின் நிதி ரீதியான முன்னேற்றம் 67.34 % வீதமாகும்.

அவ்வவ் கருத்திட்டங்களின் சுருக்கமான விளக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ஜேத்தவன கருத்திட்டம்

அகழ்வுப் பிரிவு

இவ்வருடத்தில் மொணற மாளிகையின் அகழ்வுகள், JSOWMP 2013 இன் ஆய்வு அகழ்வுகள், தொல்பொருட்களை வகைப்படுத்தல், பகுப்பாய்வுகள் மேற்கொள்ளல் தொல்பொருளியல் ஆய்வறிக்கைகள் தயாரித்தல் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் என்பன மேற்கொள்ளப்பட்டன.

ஜேத்தவன கருத்திட்டத்தின் ஒரு பகுதியாகிய மிக அழகிய மொணற மாளிகையின் அகழ்வுப் பணிகள் இவ்வருடத்தினுள் ஆரம்பிக்கப்பட்ட மிக முக்கியமான அகழ்வுப் பணியாகும். இந்த அகழ்வுகள் மூலம் புராதன கட்டிடச் சிதைவுகளின் பகுதிகள் மற்றும் அடித்தளக் கற்கள் ஆகியவற்றையும், வாயிற் கதவுகளின் சிதைவுகளையும் வெளிக்கொணர முடிந்தது.

அத்துடன் ஜேத்தவன தூபியின் மேற்கு நுழைவாயிலின் வலது பக்கத்தில் (N_1, W_4) மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் JSOWMP 2013 எனப் பெயரிடப்பட்டன. இவ் அகழ்வாராய்ச்சிகளின் போது அநுராதபுர காலகட்டத்திற்கும் முற்பட்ட காலத்து பெறுமதி மிக்க தொல்பொருட்கள் பல கண்டெடுக்கப்பட்டதுடன், காலத்தை நிர்ணயிக்கும் ஆய்வுகளுக்கென அவற்றின் மாதிரிகளை அமெரிக்காவின் பீட்டா நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் தொல்பொருட்களின் வகைப்படுத்தல், பகுப்பாய்வுகள் என்பனவற்றிற்கான பணிகள் தொடர்பாக முத்துக்கள், மட்பாண்டங்கள், பாஷாண மண்வகைகள், உலோகங்கள் போன்ற விடயங்கள் பற்றிய ஆய்வுகள் பலவும் மேற்கொள்ளப்பட்டன.

அகழ்வாராய்ச்சிப் பிரிவின் முன்னேற்றத்தினை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள் கீழே காணப்படுகின்றன.

மொணற மாளிகையின் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்ட பின்பும், அகழ்வுகள் மேற்கொள்வதற்கு முன்பும் காணப்பட்ட காட்சிகள்



JSOWMP 2013 அகழ்வுகள் மேற்கொள்வதற்கு முன்னரான காட்சியும், அகழ்வுகள் மேற்கொள்வதற்கான நிலத்தைத் தயார் படுத்தப்பட்டுள்ள காட்சியும்.

JSOWMP 2013 அகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரான காட்சியும், மண் மாதிரிகளைப் பெற்றுக் கொள்ளும் காட்சியும்.

JSOWMP 2013 அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட விசேட தொல்பொருட்கள்

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

இவ்வருடத்தினுள் அபயகிரி பேணிப் பாதுகாத்தல் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படவிருக்கின்ற மொணற மாளிகையின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள், ‘‘கே’’ எனப்படும் ஆச்சிரமத்தின் எஞ்சிய வேலைகள், தூபியின் புராதன கட்டிடத்தின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள், ஸ்ரீமகா போதி விருட்சத்தின் சுற்றுமதில் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள், திம்பிரித் தடாகத்தின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் போன்றவற்றிற்கான திட்டங்களைத் தயாரித்தலும், நிரந்தரமான வாகனத் தரிப்பிடம் அமைத்தல், நிலவமைப்பு, பூங்காக்கள் போன்றவற்றைப் பராமரித்தல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

ஜேத்தவனவிற்கு உரிய வேலைப்பாடுகளுடன் கூடிய தூண் உச்சிகள் அமைந்திருக்கும் விசேட கட்டிடமாகிய மொணற மாளிகையின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படவிருந்த போதும், தவிர்க்க முடியாத காரணங்களின் நிமித்தம் அதே வருடத்தின் செப்டம்பர் மாதத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது.

புவியமைப்பு மற்றும் பூங்காக்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் யாவும் இயந்திரங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டதுடன், எல்லைகளைக் குறித்தல் மற்றும் ஜேத்தவன பூமியின் ஏனைய பராமரிப்பு நடவடிக்கைகளும் உரிய ஒழுங்குமுறையில் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளை ஈர்ப்பதற்கான வழிவகைகள் உருவாகின.

பிக்குமார்கள் தங்கியிருக்கும் ஆச்சிரமங்களாக உபயோகிக்கப்படும் பஞ்சாவாச ஆச்சிரமத் தொகுதியாகிய ‘‘கே’’ எனப்படும் ஆச்சிரமத் தொகுதியின் சுற்றுமதிலைப் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகளும் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

தூபியின் சுவர்ப்பகுதியிலுள்ள அழிந்து போயிருக்கும் பூச்சுக்குழைப்பிற்குப் பதிலாக, அதற்கேற்ற விசேடமான பூச்சுக்குழைப்பு தயாரிக்கப்பட்டு அவற்றைப் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொண்டமை இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மிக முக்கியமான நிகழ்வுகளாகும்.

2003 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஸ்ரீமகா போதி விருட்சத்தின் சுற்றுமதில் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் இயற்கைக் காரணங்களின் நிமித்தம் அழிவடைந்ததன் பின்னர் மீண்டும் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் தொழில்நுட்ப ரீதியான முறைகளைக் கையாண்டு பழைய நிலைமைக் கொண்டு வரக்கூடிய வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

வருடம் பூராகவும் தொடர்ச்சியான ரீதியில் நிலவமைப்பு மற்றும் பூங்காக்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமிருந்தன.

பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தினை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

மொணற மாளிகையின் பேணிப் பாதுகாத்தல்கள் மேற்கொள்ளப்பட்டபோது

மொணற மாளிகையின் பேணிப் பாதுகாத்தல்கள் மேற்கொள்ளப்பட்டபோது

''கே'' எனப்படும் ஆச்சிரமத் தொகுதியின் பேணிப் பாதுகாத்தல் ஆரம்பிக்கப்பட முன்னரான காட்சியும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் காட்சியும்



ஶ்ரீமகா போதி விருட்சத்தின் சுற்றுமதில் பேணிப் பாதுகாத்தல் ஆரம்பிக்கப்பட முன்னரான காட்சியும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் காட்சியும்

அபயகிரி கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சிப் பிரிவு

அபயகிரிக் கருத்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளின் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- புராதன தூபாராம விகாரை நடைபாதையின் அகழ்வுகள்
- ருவான்வெலிசேய கிழக்குப் பகுதிச் சுற்றுமதிலின் அகழ்வுகள்
- ருவான்வெலிசேய கிழக்குப் பகுதியில் 2 ஆம் இலக்கக் கட்டிடத்தின் அகழ்வுகள்
- ருவான்வெலிசேய சுற்றுமதிலின் வெளிப்புறத்தே கிழக்குப் பகுதியின் அகழ்வுகள்
- அபயகிரி விகாரை வளவில் மெகாலிதிக் மயான பூமியின் அகழ்வுகள்
- 2013 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் அறிக்கை தயாரித்தல்

இதன் பிரகாரம் மகாவிகாரை வளவினுள் அமைந்துள்ள தூபாராம விகாரை நடைபாதையின் அகழ்வு நடவடிக்கைகள் இவ்வருடத்தில் ஜனவரி மாதம் தொடங்கி மே மாதம் வரை நடாத்தப்பட்டன. அகழ்வுகளின் பின்னர் அவற்றைப் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

ருவான்வெலிசேய சுற்றுமதிலின் எல்லைகளில் அகழ்வுகள் நடாத்தப்பட்டு பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் அபயகிரி விகாரை வளவில் மெகாலிதிக் மயான பூமியின் அகழ்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்நடவடிக்கைகளின் அடிப்படையில் வருடம் பூராகவும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் தொடர்பான அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டன.

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

அபயகிரி பேணிப் பாதுகாத்தல் கருத்திட்டத்தின் கீழ் இவ்வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள், பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- லங்காராம விகாரையின் கட்டிடங்களைப் பேணிப் பாதுகாத்தல்
- சந்திரவட்டக்கல்லின் அருகாமையிலுள்ள நடைபாதையைப் பேணிப் பாதுகாத்தல்
- தூபாராம விகாரையின் போதிவிருட்ச மண்டபத்தினை பேணிப் பாதுகாத்தல்
- தூபாராம விகாரையின் வெளிச் சுற்றுமதிலைப் பேணிப் பாதுகாத்தல்
- அபயகிரி தூபியினைப் பேணிப் பாதுகாத்தல்
- ருவான்வெலிசேய 4ஆம் இலக்க கட்டிடத்தினைப் பேணிப் பாதுகாத்தல்
- ருவான்வெலிசேய வைத்தியசாலையைப் பேணிப் பாதுகாத்தல்
- தூபாராம வைத்தியசாலையைப் பேணிப் பாதுகாத்தல்
- நூதனசாலையின் கூரையைப் புதுப்பித்தல்
- புத்தக விற்பனை நிலையத்தைப் புதுப்பித்தல்
- அபயகிரி விகாரையின் முப்பரிமாணத் திட்டத்தினைத் தயாரித்தல்
- ஆராய்ச்சிகளும் வெளியீடுகளும்
- தொழில்நுட்ப ரீதியான பராமரிப்புகள்
- சாதாரண பராமரிப்புகள்
- அபயகிரித் தூபியின் பராமரிப்புகள்
- நூதனசாலையின் கழிவறையைப் புதுப்பித்தல்
- வாகன சேவைகளின் மத்திய நிலையத்தை அமைத்தல்
- கொம்போஸ்ட் உரம் தயாரிப்பு நிலையத்தின் கூரை அமைத்தல்
- இரசாயன கூடத்தினைப் புதுப்பித்தல்
- ருவான்வெலிசேயவில் குடிநீர்க் குழாய்களை அமைத்தல்
- பணிப்பாளரது உத்தியோகபூர்வ இல்லத்தின் கழிவறையைப் புதுப்பித்தல்
- அலுவலகத்தினைப் புதுப்பித்தல்

இதன் பிரகாரம் லங்காராமயவில் பிக்குகளின் தங்குமிடமாகக் கருதப்படும் கட்டிடம் வெள்ளப்பெருக்கில் மூழ்கிய காரணத்தினால் அதுவரை பேணிப் பாதுகாக்கப்பட்டிருந்த, அழிவடைந்த அப்பிரதேசங்களை மீண்டும் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதாயிற்று. ஆகையினால் ஏற்கெனவே இந்த நடவடிக்கைகளுக்கென மதிப்பீடு செய்யப்பட்டிருந்த நிதியை விடவும் மேலதிகமான நிதி தேவைப்பட்டது. அத்துடன் தூபாராம விகாரையைச் சுற்றியுள்ள 500 மீட்டர் நீளமும், 1.5 மீட்டர் உயரமும் கொண்ட சுற்றுமதிலின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளும் சமகாலத்தில் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட அபயகிரி தூபியின் கற்றள மாடம் மற்றும் கர்ப்பக்கிருகம் போன்றவற்றைப் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகளின் இறுதிக் கட்ட வேலைகள் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் ருவான்வெலிசேய விகாரையின் கிழக்குப் பகுதி நுழைவாயிலின் அருகே “வைத்தியசாலை” என அழைக்கப்படும், நினைவுச் சின்னமாக விளங்கும் ஒரு கட்டிடத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்ட போதும், எதிர்பார்க்கப்பட்ட காலகட்டத்தில் அந்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட முடியாமற் போன காரணத்தினால் அடுத்த வருட திட்டங்களுடன் அவை சேர்க்கப்பட்டுள்ளன.

அத்துடன் அபயகிரி விகாரையின் விகாராதிபதி தேரரின் வேண்டுகோளுக்கு இணங்கி விகாரையின் வரைபடத்தைத் தயாரித்தமையும் பேணிப் பாதுகாத்தல் பிரிவின் மிக முக்கியமான பணியாகக் கருதப்படுகின்றது. பேணிப் பாதுகாத்தல் அறிக்கைகளைத் தயாரிக்கும் நடவடிக்கைகளில் 2003 ஆம், 2004 ஆம் ஆண்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அச்சிடும் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அபயகிரி விகாரை வளவில் கடந்த காலத்தில் பேணிப் பாதுகாக்கப்பட்ட புனித சின்னங்கள் சிதைவடைந்ததன் காரணமாக அவற்றை மீண்டும் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன. இதன் பிரகாரம் புனித சின்னங்களுக்குச் செல்லும் பாதைகளை சீரமைத்தல், கட்டிடங்களைப் பராமரித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் அபயகிரி தூபியின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளைத் தற்காலப் படுத்தும் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அங்கே சாந்து பூசப்படாத சுவர்களைச் சீரமைத்தல், களை பிடுங்குதல், மணல் மாடத்தினைச் சுத்திகரித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி அவர்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளல், கொம்போஸ்ட் உரம் தயாரிக்கும் நிலையத்தினை அமைத்தல், அநுராதபுர இரசாயன கூடத்தினைப் புதுப்பித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் இவ்வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்டன.

பொலொன்னறுவை கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சிப் பிரிவு

இவ்வருடத்தில் அத்துல்நுவர விகாரையின் தெற்குப் பகுதி சுற்றுமதிலின் அகழ்வுப் பணிகள் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டன. இதன் முதற் கட்டமாக முழுச் சுற்றுமதிலின் சுமார் 100 மீட்டர் தூரம் வரை அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு மறுசீரமைக்கப்பட்டுள்ளதுடன், இரண்டாம் கட்டமாக சுமார் 112 மீட்டர் தூரம் வரை அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன் 10 ஆன்மீகப் போதனைகள் நடாத்தியமை, மாணவர் பயிற்சித் திட்டத்தின் கீழ் களனிப் பல்கலைக் கழகத்தின் தொல்பொருளியல் பிரிவில் 23 முதலாண்டு மாணவர்களுக்கு வெளிக்களப் பயிற்சிகளை வழங்கியமை மற்றும் வருடாந்த தொல்பொருளியல் கருத்தரங்குகளை நடாத்தியமை போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. அத்துடன் தொல்பொருளியல் இரசாயனகூடத்தில் ஆறு மாதங்களாகத் தொடர்ச்சியாக ஆய்வுகளும் நடாத்தப்பட்டன.

பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தினை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

அத்துல்நுவர விகாரையின் தெற்குப் பகுதி சுற்றுமதிலின் முதற் கட்ட அகழ்வுப் பணிகள்

அத்துல்நுவர விகாரையின் தெற்குப் பகுதி சுற்றுமதிலின்
இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள்

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

இப் பிரிவின் கீழ் லங்காதிலக விகாரையின் சிலைக்கூடம், கிழக்குத் திசை விகாரை, அத்துல்நுவர தெற்குப் பகுதி சுற்றுமதில், அத்துல்நுவர கிழக்குப் பகுதி சுற்றுமதில், அத்துல்நுவர வடக்கு வாயிலின் மேற்குப் பகுதி ஆகிய தொல்பொருளியல் சார்ந்த பிரதேசங்கள் பேணிப் பாதுகாக்கப்படுவதற்கும், தொழில்நுட்ப ரீதியாகப் பராமரிக்கப்படுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

லங்காதிலக விகாரையின் சிலைக்கூடத்தின் தெற்குப் பகுதி சுவரில் ஏற்பட்டிருந்த சிதைவுகளை சாந்து பூசிப் பேணிப் பாதுகாக்கப்பட்டது. இந்நடவடிக்கைகள் மே மாதம் தொடங்கி செப்டம்பர் மாதம் வரை மேற்கொள்ளப்பட்டன.

அகழ்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட 02 ஆம் இலக்க சிவாலயத்தின் அருகே வாஸ்து சாஸ்திரப்படி நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் ஒரு தூபியாக இருக்கலாம் எனக் கருதப்படுவதுடன், பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி தூபியின் மறுசீரமைப்புகளின் போது அதன் வாஸ்து சாஸ்திர முறைகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வண்ணம் பேணிப் பாதுகாக்கப்பட்டதுடன், கர்ப்பக்கிருகத்தின் பகுதிகளும் கண்டெடுக்கப்பட்டு அதன் அடிப்படையிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இயற்கை ரீதியாகவும், மனிதர்களின் முறையற்ற செயல்களாலும் பெருமளவில் பாதிக்கப்பட்ட அத்துல்நுவர விகாரையின் தென் பகுதி சுற்றுமதிலின் அகழ்வுப் பணிகளின் பின்னர் அவற்றைப் பேணிப் பாதுகாக்கப்பட்ட அதேவேளை அத்துல்நுவர கிழக்குப் பகுதி சுற்றுமதிலின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் தொழில்நுட்ப ரீதியான பராமரிப்பு நடவடிக்கைகளின் போது ஆலாபனைப் பிரிவெனா, வைத்தியசாலையின் பகுதிகள், மதில்கள் போன்றவற்றைப் பேணிப் பாதுகாப்பதற்கும், விஜயபாகு மாளிகையைப் பேணிப் பாதுகாத்தல், கிரிவிகாரையில் சுண்ணாம்பு பூசுதல், தொல்பொருள் சார்ந்த பிரதேசங்களுக்கான நடைபாதைகளை அமைத்தல், கல் விகாரையைப் பராமரித்தல், பிக்குமாரின் தங்குமிட இல்லங்கள் அமைத்தல் மற்றும் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் அறிக்கை தயாரித்தல் என்பன இவ்வருடத்தினுள் இடம்பெற்றன.

வருடத்தினுள் இடம்பெற்ற பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

லங்காதிலக விகாரைச் சிலைக்கூடத்தின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளுக்கு முன்னரும் அதன் பின்னரும்



கிழக்கு விகாரையின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளுக்கு முன்னரும் அதன் பின்னரும்

கிரி விகாரையில் சுண்ணாம்பு பூசப்பட்ட பின்னர்

பிக்குமாரின் தங்குமிட இல்லம் அமைத்த பின்னர்

சீகிரியா கருத்திட்டம்
அகழ்வாராய்ச்சிப் பிரிவு

சீகிரியா வளவிற்கு உட்பட்டுள்ள நீர் நிறைந்த அகழிகளின் தெற்கு மற்றும் மேற்கு அந்தங்கள் முழுமையாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டிருந்த போதும், வடக்கு அந்தம் பேணிப் பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால் அகழியின் வடக்கு அந்தம் தொடங்கி நீர் வெளியேற்றும் வான் கதவுகள் வரை அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் சீகிரியாவை அண்மித்த பிரதேசத்தினுள் அமைந்துள்ள தொல்பொருளியல் சார்ந்த இடங்கள் தொடர்பான தரவுகளைச் சேகரித்து அறிக்கை தயாரிக்கும் நோக்கத்துடன், குகைகள் நிறைந்த பிரதேசமாகிய நாகொல்ல மாகல்லென என்னும் பிரதேசத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது பிராஹ்மி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டதும், நீர் வழிந்தோடும் கால்வாய் வெட்டப்பட்டதுமான 12 குகைகள், புதையல் தோண்டும் கொள்ளையர்களால் அழிக்கப்பட்ட, புராதன சின்னங்கள் அடங்கிய 15 பிரதேசங்கள் மற்றும் எஞ்சிய தொல்பொருட்கள் நிறைந்த 03 பிரதேசங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அகழ்வுகள் பற்றிய அறிக்கைகளை அச்சிடுவதற்காகத் தயாரித்தல், தொல்பொருட்களின் பகுப்பாய்வுகள் மற்றும் தொல்பொருட் தகவல்களைக் களஞ்சியப் படுத்துதல், தொல்பொருட்களைப் பேணிப் பாதுகாத்தல் மற்றும் மட்பாண்டங்களைப் பகுப்பாய்வு செய்தல் போன்ற பல நடவடிக்கைகள் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

நூதனசாலையில் விசேட கண்காட்சிகள், ஆவணக் களஞ்சியங்கள், கூடங்கள், தொல்பொருட்களின் தரவுகளை நிரந்தரமக ஒழுங்குபடுத்தல் மற்றும் நாளாந்த பராமரிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அகழ்வாராய்ச்சிப் பிரிவின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

அகழ்வுக்கு முன்னர் நிலத்தின் அமைப்பு

ஆராய்ச்சிக்கு உட்பட்ட பகுதி



வருட இறுதியில் அகழ்விற்குட்பட்ட நிலத்தின் அமைப்பு

ஆராய்ச்சிக்கு உட்பட்ட அகழி இல.01) (அகழ்வின் போது கல்வரிகள் தென்பட்ட காட்சி

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

கடந்த வருடத்தின் முதற் காலாண்டுப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு, இடைநிறுத்தப்பட்ட சிங்கபாதத்தின் மேற்குப் பகுதியைப் பேணிப் பாதுககாக்கும் நடவடிக்கைகள், சிங்கபாத மாடத்தின் கிழக்குப் பகுதி, தொழில்நுட்ப ரீதியான பேணிப் பாதுகாத்தல்கள், மலையுச்சியில் தெற்கு அந்தத்தைப் பேணிப் பாதுகாத்தல், மொறகஹமுல பராமரிப்பு நடவடிக்கைகள், பழைமையான அலுவலகத்தைப் பேணிப் பாதுகாத்தல், கட்டிடங்களின் பராமரிப்பு மற்றும் பாதைகளின் பராமரிப்பு ஆகிய பல நடவடிக்கைகள் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

இதன் பிரகாரம் கடந்த வருட முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட சிங்கபாதத்தின் மேற்குப் பகுதியை பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மழை காரணமாக இடைநிறுத்தப்பட்டன. இவ்வருடத்தில் மீண்டும் அவை ஆரம்பிக்கப்பட்டு, சுண்ணாம்பு, சீமெந்து, மண் ஆகியவற்றைக் கொண்டு மறுசீரமைக்கப்பட்டு பேணிப் பாதுகாக்கப்பட்டன.

சிங்கபாத மாடத்தின் கிழக்குப் பகுதியில் செங்கற்கள் உடைந்து வீழ்ந்திருந்த காரணத்தினால் அவையும் மறுசீரமைக்கப்பட்டு பேணிப் பாதுகாக்கப்பட்டன.

அத்துடன் நுண்ம உயிரினங்கள் வாழும் நீர்ப் பூங்கா மற்றும் எல்லைகளுடனான மாடப் பூங்கா ஆகியவை இயற்கைக் காரணங்களினாலும், மனிதர்களின் முறையற்ற செயல்களாலும் பாதிப்படைந்து இருந்த கட்டிடப் பகுதிகள் மறுசீரமைத்துப் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

தொல்பொருளியல் திணைக்களத்தினால் ஏற்கெனவே பேணிப் பாதுகாக்கப்பட்டு, தற்போது இயற்கைக் காரணிகளால் சிதைவடைந்து போயுள்ள சீகிரியா மாளிகைத் தொகுதியில் மேற்குப் பகுதியில் உள்ள கட்டிடப் பகுதிகள் இவ்வருடத்தில் மறுசீரமைக்கப்பட்டு பேணிப் பாதுகாக்கப்பட்டன. அதேவேளை அதன் புராதனத் தன்மைக்குப் பாதிப்பு ஏற்படாத வண்ணம் மிகவும் அவதானத்துடன் அதற்கேற்ற கற்கள், பூச்சுக்களைக் கொண்டு மறுசீரமைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

சீகிரியாவில் உல்லாசப் பயணிகளுக்கான விற்பனை நிலையங்கள் அமைந்திருக்கும் மொறகஹமுல என்னும் பிரதேசத்தில் உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில் பூங்காக்கள் அமைக்கப்பட்டு அப்பிரதேசம் அபிவிருத்தி செய்யப்பட்டது.

சீகிரியாவில் புதிதாக தொல்பொருளியல் நூதனசாலை ஒன்றை நிறுவப்படுவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டதன் காரணமாக பழைய கட்டிடங்களை மறுசீரமைத்து, அதன் கூரைகள், கதவு யன்னல் ஆகியவற்றின் புராதனத் தன்மைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பேணிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இயற்கைக் காரணிகளாலும், உல்லாசப் பிரயாணிகளாலும் ஏற்படுத்தப்பட்ட சேதங்களைச் சீரமைத்து பாதைகளை ஒழுங்குபடுத்தி, உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் வகையில் பூங்காக்களும் அமைக்கப்பட்டன.

தம்புள்ள கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சிப் பிரிவு

இத்திட்டத்தின் கீழ் தெம்பவ டெம்பிட்ட விகாரை, அவரியபத்தஹு குகை விகாரை, மஹுவெஹெர டெம்பிட்ட விகாரை, மானின்கமுவ புராண விகாரை, தலகிரியாவ டெம்பிட்ட விகாரை ஆகியவற்றிலுள்ள சுவரோவியங்களைப் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வருடத்தினுள் தம்புள்ள கருத்திட்டத்தின் மூலம் வலகம்பா பிரிவெனா பன்சலையில் பிக்குமாரின் ஆச்சிரமம், பௌர்ணமி இல்லம், நூதனசாலை, உயன்வத்த பன்சலவின் பாதுகாப்பு அரண் ஆகிய கட்டிடங்களை வாஸ்து விஞ்ஞான ரீதியாக பேணிப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சுவரோவிய நூதனசாலையின் உள்ளக பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், மின்சாரத் தொகுதியினைப் பரிசீலனை செய்து மின்விளக்குகள் ஆகியவற்றைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் வகையில் நிலவமைப்பு மற்றும் பூங்காக்ககள் பராமரிக்கப்பட்டு பேணப்பட்டன.

அகழ்வாராய்ச்சிப் பிரிவின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

தெம்பவ டெம்பிட்ட விகாரையின் சுவரோவியங்களைப் பேணுதல்

கண்டி கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சிப் பிரிவு

இவ்வருடத்தில் முக்கியமாக பம்பரகல தொல்பொருளியல் பிரதேசத்தில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன், பம்பரகல மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், அகழ்வுகள் மற்றும் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் அறிக்கை தயாரித்தல், தொல்பொருட்களின் பகுப்பாய்வு, கல்வி மற்றும் பிரச்சார நடவடிக்கைகள், மெதவாசல அரசியின் நூதனசாலையைப் பேணிப் பாதுகாத்தல் போன்றவையும் மேற்கொள்ளப்பட்டன.

இதன் பிரகாரம் பம்பரகல தொல்பொருளியல் பிரதேசத்தின், ஆரம்ப அகழ்வு நடவடிக்கைகள் (4 x 2 மீட்டர் அளவில்) பரீட்சார்த்த அகழ்வாராய்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன், பம்பரகல பிரதேசத்தில் கடினமான 20 குகைப் பிரதேசங்களிலும் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இங்கு,

1. நிலத்தள வரைபடங்களைத் தயாரித்தல்
2. கல்வெட்டுக்களைப் பிரதி செய்தல்
3. மாதிரிகளை ஒருங்கிணைத்தல்

ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அகழ்வுகள், பராமரித்துப் பேணிப் பாதுகாத்தல் அறிக்கைகளைத் தயாரிக்கும் போது பின்வரும் செயற்பாடுகள் அமுல் படுத்தப்பட்டன.

1. 2012 ஆம் ஆண்டின் வருடாந்த பேணிப் பாதுகாத்தல் அறிக்கையைக் கணினி மயப்படுத்தல்
2. 2012 ஆம் ஆண்டின் சுவரோவியப் பேணிப் பாதுகாத்தல் அறிக்கையைக் கணினி மயப்படுத்தல்
3. மெனிக்ஹின்ன பொத்குல் விகாரையின் ஓலைச் சுவடுகள், புத்தகங்கள் ஆகிய புராதன ஆவணங்களை பதிவு செய்து ஆவணப்படுத்தல்
4. புராதன திரிபிடக நூலை ஆவணப்படுத்தல்
5. மலைநாட்டின் புனரவாலோகன சம்பிரதாயக் கோவைக்காக கிடைக்கப் பெற்றுள்ள 18 ஆக்கங்களைப் பேணிப் பாதுகாத்தல்
6. கருத்திட்டங்களின் நூலகத்திற்குத் தேவைப்படும் புத்தகங்களைக் கொள்வனவு செய்தல்

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

கடந்த வருட இறுதிக் காலாண்டுப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட கந்தேபிட்ட டெம்பிட்ட விகாரை, மெனிக்ஹின்ன ரஜமகா விகாரை மற்றும் தும்பனை இஹல விகாரையின் மதிற்கட்டு ஆகியவற்றின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் எஞ்சிய வேலைப் பகுதிகள் மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரரின் உத்தியோகபூர்வ ஆச்சிரமம், நாத தேவாலயத்தின் பிக்குமார் தங்குமிடத்தின் கூரை, முலாதெனி மாளிகை ஆகியவற்றின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளும், சர்வதேச தகவல்கள் நிலையத்தின் புதுப்பித்தல்களும் இவ் வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

ராம விகாரை, மல்வத்து விகாரைத் தொகுதியின் கூரை, வத்துபொல புராண விகாரை, பிலவல கல்ஏதண்ட ரஜமகா விகாரை மற்றும் மெதவாசல அரசியின் நூதனசாலை ஆகிய இடங்களின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொத்துஹெர மடுகல்ல விகாரை, (அஸ்கிரி விகாரைத் தொகுதி), அஸ்கிரி விகாரைத் தொகுதியிலுள்ள புராதன கிணறு, கடலாதெனிய ரஜமகா விகாரை ஆகியவற்றினைப் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்கான யோசனைகள் முன்வைக்கப்பட்ட போதும், போதுமானளவு பேணிப் பாதுகாத்தல் உத்தியோகத்தர்கள் இன்மையால் அத்திட்டங்கள் 2014 ஆம் வருடத்திற்காகப் பின்போடப்பட்டுள்ளன.

சுவரோவியப் பேணிப் பாதுகாத்தல் பிரிவின் மூலம் தந்துரே ரஜமகா விகாரை, பம்பரகல ரஜமகா விகாரை, கந்தேபிட்ட டெம்பிட்ட விகாரை, மெனிக்ஹின்ன விகாரை ஆகியவற்றின் சுவரோவியங்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டமை மிக முக்கிய விடயமாகக் கருதப்படுகின்றது.

கருத்திட்டத்தின் வசதிகளை மேம்படுத்தும் முகமாக சர்வதேச தகவல்கள் நிலையத்தினைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் மற்றும் அலுவலகக் கட்டிடங்கள், பூங்காக்கள் ஆகியவற்றைப் பராமரிக்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றில் மிக முக்கிய கவனம் செலுத்தப்படுகின்றது.

இவை தவிர, உலக உரிமைகள் பிரிவின் நடவடிக்கைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

பேணிப் பாதுகாத்தல் பிரிவினாமேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகள்

மெனிக்ஹின்ன ரஜமகா விகாரை பேணிப் பாதுகாக்கப்பட்ட பின்னர்

மல்வத்து விகாரைத் தொகுதியின் கூரை பேணிப் பாதுகாப்பதற்கு முன்னரும் பின்னரும்

கந்தேபிட்ட டெம்பிட்ட விகாரை பேணிப் பாதுகாப்பதற்கு முன்னரும் பின்னரும்



பேணப்பட்ட கந்தேபிட்ட டெம்பிட்ட
விகாரைச சுவரோவியம்

பேணப்பட்ட பம்பரகல விகாரைச்
சுவரோவியம

ரம்பா விகாரைக் கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சிப் பிரிவு

இத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளில் நிலத்திட்டத்தின் 21 ஆம் இலக்க ஆச்சிரமத் தொகுதியின் நிலத்தை அகழ்வு செய்யும் போது ஆச்சிரமத்தின் கதவு, 10/1 ஆம் இலக்க ஆச்சிரமம், 17/1 ஆம் இலக்க ஆச்சிரமம் ஆகியவற்றின் அகழ்வுகள் இடம்பெற்றன.

21 ஆம் இலக்க ஆச்சிரமத் தொகுதியின் நிலப் பிரதேசச் சிக்கல்களை சீர் செய்யும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் இவ்வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரை மேற்கொள்ளப்பட்டு முழு வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டன.

அத்துடன் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டு, இடைநிறுத்தப்பட்ட 10/1 ஆம் இலக்க ஆச்சிரமத்தின் அகழ்வு நடவடிக்கைகள் இவ்வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டன.

அத்துடன் 21 ஆம் இலக்க ஆச்சிரம உள்பிரகாரத்தின் கதவுகள் சீர்திருத்தப்பட்டமை இவ்வருடத்தில் நிகழ்ந்த இன்னொரு விசேட அம்சமாகும்.

அத்துடன் ருஹுணு கலைகள் வட்டம் என்னும் திட்டத்தின் கீழ் சித்தம்கல்லென விகாரை போதனாமண்டபத்தைப் புதுப்பித்தல், கலகம சைலாராமய விகாரை மண்டபத்தைப் புதுப்பித்தல் மற்றும் நயிகல ரஜமகா விகாரையயின் வாயிற்கடவை அமைத்தல் ஆகிய பல திட்டங்கள் வருடம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன், விசேட மட்பாண்டங்களின் தொல்பொருளியல் பகுப்பாய்வுகளும் வருடம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டன.

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட 21 ஆம் இலக்க ஆச்சிரமத் தொகுதியின் உள் வாயில் பேணிப் பாதுகாக்கப்பட்டது.

அத்துடன் கடந்த வருடம் மேற்கொண்ட பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் போது 17/1 ஆம் இலக்க ஆச்சிரமத்தின் எஞ்சிய வேலைப் பகுதிகள் இவ்வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டன.

தொழில்நுட்ப ரீதியான பராமரிப்பு நடவடிக்கைகளின் மூலம் பேணப்பட்ட சின்னங்களுள் அத்தியாவசியமாகப் பராமரிக்கப்பட வேண்டியவற்றின் பேணல்கள் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டன.

நினைவுச் சின்னங்களினதும் கருத்திட்ட வளவினதும் நாளாந்த பராமரிப்பு நடவடிக்கைகள், இரசாயனகூடம், புராதன பூச்சுக் குழைப்புக்கள் ஆகியவற்றைப் பேணிப் பாதுககாக்கும் நடவடிக்கைகள் மற்றும் ஒழுங்குபடுத்துதல் ஆகியவை தொடர்ந்து இடம்பெற்றன.

திஸ்ஸமகாராம கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சிப் பிரிவு

அக்குருகொட தொல்பொருளியல் ஆய்வுகளுக்கான அகழ்வு நடவடிக்கைகள் இவ்வருடம் பூராகவும் மேற்கொள்ளப்பட்டன. அப்பிரதேசத்தில் தற்போது மக்களின் முறையற்ற செயல்கள் மிகவும் குறைவாகவே காணப்பட்டதுடன், அங்கு நூற்றுக் கணக்கான வருடங்களாக மனிதக் குடியிருப்புக்கள் இருந்தமைக்கான பல சான்றுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த அகழ்வுகளின் போது நாணயங்கள், சிவப்பு, கறுப்பு நிற மட்பாண்டங்கள், முத்துக்கள், மனித அஸ்தி, ஆபரணங்கள், கண்ணாடிப் பொருட்கள், இரும்புப் பொருட்கள் ஆகியன கண்டெடுக்கப்பட்டன.

அத்துடன், விசேட தொல்பொருளியல் பிரிவு, இரசாயன ஆய்வுகூடம் (கதிர்காம நூதனசாலைக் கருத்திட்டம்), நூதனசாலைப் பராமரிப்பு, பிரச்சார நடவடிக்கைகள் என்பன தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. பிரச்சாரப் பிரிவின் கீழ் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் கல்விக் கருத்தரங்குகள் மாதத்திற்கொரு நிகழ்ச்சியாக வருடம் முழுவதும் நடைபெற்றன. புதுவருடத்திற்கான கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அகழ்வாராய்ச்சி இடம்பெற்ற பிரதேசத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மேற்படி விடயம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.

அகழ்வு நடவடிக்கைகளின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்

வருட இறுதியில் அகழ்வு அறிக்கை தயாரிப்பதற்கான
அக்குருகொட அகழ்வுகளின் புகைப்படங்கள்

அகழ்வின் போது சந்தகிரி தூபியின் அடித்தளம் காணப்பட்ட நிலை

அகழ்வின் போது சந்தகிரி தூபியின் அடித்தளம் காணப்பட்ட நிலை



அகழ்வின் போது சந்தகிரி தூபியின் அடித்தளம் காணப்பட்ட நிலை

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

திஸ்ஸமகாராம கருத்திட்டத்தின் கீழ் இவ்வருடத்தினுள் பெருமளவு பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றைச் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளது.

1. பொஹொய கெய (பௌர்ணமி இல்லம்) பேணிப் பாதுகாத்தல்
2. திஸ்ஸமகாராம சைத்தியாலயத்தின் கோபுரக் கலசம் பேணிப் பாதுகாத்தல்
3. தூபியின் வடக்கு, தெற்கு எல்லைகளை பேணிப் பாதுகாத்தல்
4. மகா விகாரையின் கிரியை மண்டபத்தினை அமைத்தல்
5. சந்தகிரி தூபி வளவில் வாகனத் தரிப்பிடம் அமைத்தல்
6. தூபி மாடத்தில் கற்கள் அடுக்குதல்
7. தொல்பொருளியல் பீடம் அமைத்தல்
8. போதிவிருட்சப் பிரகாரம் அமைத்தல்
9. பிக்குணிமாரின் ஆச்சிரமத்தில் சமையலறை அமைத்தல்
10. பராமரிப்பு நடவடிக்கைகள்

இதன் பிரகாரம் சந்தகிரி தூபியினை அண்மித்த பிரதேசத்தில் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நூற்றுக்கு 90% வீதம் இவ்வருடத்தினுள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. சந்தகிரி தூபியின் மேல்மாடத்தில் கற்கள் அடுக்கி ஒழுங்கமைக்கப்பட்டு, தொல்பொருட்களை ஒழுங்கமைப்பதற்கான பீடங்களும் அமைக்கப்பட்டன. புராதன தூபியின் கட்டிட நிர்மாணக் கலையை எடுத்துக் காட்டும் வகையில் அத்தூபியின் மாதிரி உருவாக்கப்பட்டுள்ளது.

தூபியின் வடமேற்குத் திசையில் அமைந்துள்ள போதிவிருட்ச மாடத்தில் தளத்தை ஒழுங்கமைத்து சிறிய மதில் கட்டப்பட்டது. அத்துடன் சந்தகிரி தூபியின் மேற்குத் திசையில் அமைந்துள்ள விசாலமான போதிவிருட்சத்தினைச் சுற்றி மதிற்கட்டு அமைக்கப்பட்டு, புத்தர் சிலை நிறுவுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தூபியின் தென்கிழக்குத் திசையில் அமைந்துள்ள பிக்குணிமாரின் புராதன ஆச்சிரமத்தில் இருந்த பழைய சமையலறைக்குப் பதிலாக புதிதாக சமையலறை கட்டப்பட்டது.

இவ்விகாரைக்கு வருகை தரும் உல்லாசப் பிரயாணிகளின் வாகனங்களை நிறுத்துவதற்கு வாகனத் தரிப்பிடம் கடந்த வருடத்தில் அமைக்கப்பட்ட போதும், அப்பிரதேசத்தை அழகுபடுத்தும் நடவடிக்கைகளை இவ்வருடத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் சந்தகிரி தூபிக்கு வருகை தருவோருக்கும், நினைவுச் சின்னங்களைப் பார்வையிடுவதற்காக வருகை தருவோருக்கும் அமைக்கப்படவிருக்கும் பாதையின் நிர்மாணப் பணிகள் அடுத்த வருடத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

திஸ்ஸ தூபியின் கோபுரக் கலசத்தில் ஏற்பட்ட வெடிப்புகளை மறுசீரமைத்து பேணிப் பாதுகாத்தமை, இவ்வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட அதிவிசேட பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கையாகக் கருதப்படுகின்றது. கோபுரக் கலசத்தில் தேவதா கொட்டுவ எனப்படும் தேவதைச் சதுக்கப் பகுதியிலும், நாற்சார் சதுக்கப் பகுதியிலும் ஏற்பட்டிருந்த வெடிப்புக்களை இணைப்பதற்கான விசேட பூச்சுக்கள் தயாரிக்கப்பட்டு, அவ் வெடிப்புக்களை ஒட்டிச் சீர்படுத்தியமையும், பின்னர் கோபுரக் கலசத்திற்கு பாஸ்கா எனப்படும் விசேட மை பாவித்து பூச்சுக்கள் பூசப்பட்டமையும் அத்துடன் இங்கு அமைக்கப்பட்டிருந்த மின்னல் தாக்கத்தினைத் தடுக்கும் கருவி பழுதடைந்தமையால் புதிதாக மின் கடத்தி ஒன்று அமைக்கப்பட்டது.

அத்துடன் பொஹொயகெய எனப்படும் பௌர்ணமி இல்லம் அமைத்தலும் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையாகும்.

கருத்திட்ட வளவில் நடைபெறும் பராமரிப்பு நடவடிக்கைகளும், பேணிப் பாதுகாத்தல் அறிக்கை தயாரித்தலும் தொடர்ச்சியாக இடம்பெற்றன.

பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்

சந்தகிரி தூபியின் மாடம் பேணிப் பாதுகாக்கப்படும் முன்னரும், பின்னரும்

தூபி பேணிப் பாதுகாக்கப்பட்ட போது

காலி சமுத்திர தொல்பொருளியல் கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சிகள் மற்றும் தொல்பொருளியல் ஆராய்ச்சிகள் பிரிவு

கடல் சார் தொல்பொருளியல் ஆய்வுப் பிரிவு வருடம் முழுவதும் நடைமுறையிலிருந்தமையால், இலங்கையின் வடக்கு, கிழக்கு, வடமேல் மாகாணங்களுக்குரிய கடற் பிரதேசத்தில் கடலில் மூழ்கியிருக்கும் கப்பல்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் தற்போது ஆய்வுக்குட்படுத்தி அறிக்கை சமர்ப்பித்துள்ள காலித் துறைமுகத்தை அண்டிய பிரதேசங்களில் மேற்கொண்ட தொல்பொருளியல் ஆய்வுகள் தொடர்பான இடங்களைப் பேணிப் பாதுகாப்பதும், அவற்றை ஒழுங்கமைப்பதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அத்துடன், சமுத்திர தொல்பொருளியல் நூதனசாலையைப் பார்வையிட வருவோருக்கு விசேட சொற்பொழிவுகள், செயலமர்வுகள், கண்காட்சிகள் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகள் ஆகியன நடாத்தப்படுகின்றன. காலி சமுத்திர தொல்பொருளியல் பிரிவின் மூன்றாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட ‘‘சம்பிரதாயபூர்வ நன்னீர் மீன்வளர்ப்புத் தொழில்’’ என்னும் தொனிப்பொருளை மையமாக வைத்து ‘‘சமுத்திரிகா’’ என்னும் கண்காட்சியும், கருத்தரங்கும் இடம்பெற்றன.

அத்துடன் பிரச்சாரப் பிரிவின் மூலம் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளைத் தெளிவூட்டும் வகையில் நூதனசாலை பற்றிய துண்டுப் பிரசுரங்கள் தயாரித்தமையும், உல்லாசப் பிரயாணிகளின் வழிகாட்டி நூலில் (Travel lanka) நூதனசாலை பற்றிய விளக்கங்களைப் பிரசுரித்து விளம்பரப்படுத்தியமையும் இடம்பெற்றன. அத்துடன் பின்வரும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

- நூதனசாலை பணிக்குழுவினருக்கு சீருடை வழங்குதல்
- தகவல் நிலையத்திற்கும் அவொன்ஸ்டர் கூடத்திற்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல்
- நுழைவுச் சீட்டு விநியோக நிலையத்தை புதுப்பித்தல்
- நூதனசாலையின் வெளியேறிச் செல்லும் கதவு அருகே சிற்றுண்டிச் சாலையும், இளைப்பாறும் மண்டபமும் அமைப்பதற்கான பொருட்களைக் கொள்வனவு செய்தல்
- வெளியீட்டுப் பிரிவும், மாதிரி உருவமைப்பு நிலையமும் நிறுவுவதற்காக தயார்படுத்தல்

அத்துடன் நூதனசாலையைப் பார்வையிட வருவோரின் அபிப்பிராயங்களை அறியும் பொருட்டும், திருப்திகரமான அடிப்படை வசதிகள் கிடைக்கப் பெற்றனவா என்பதை அறியும் பொருட்டும் உல்லாசப் பிரயாணத்துறை ஆய்வுகளை மேற்கொண்டமை இவ்வருடத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளாகும்.

அகழ்வுப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கைகள்



நூதனசாலையினால் தயாரிக்கப்பட்ட துண்டுப் பிரசுரம்

புதிய மாதிரி உருவமைப்பு நிலையம்

சொற்பொழிவு மற்றும் விசேட கண்காட்சி நிகழ்ச

கடல்சார் தொல்பொருளியல் இரசாயனகூடத்தில் தொல்பொருட்கள் பேணிப் பாதுகாக்கப்படல்

நூதனசாலையின் முன் பகுதியில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் இரும்பு நங்கூரம், இலங்கையில் இறுதியாகப் பாவித்த மரத்தினாலான ஓடங்கள், கட்டுமரங்கள், மட்பாண்டங்கள், கண்ணாடிப் பொருட்கள் ஆகிய பல தொல்பொருட்களும், நூதனசாலைக் கட்டிட புராதன கதவின் இருமருங்கிலும் வைக்கப்பட்டுள்ள ஒல்லாந்த, பிரித்தானிய இலச்சினைகள் போன்ற பல தொல்பொருட்களினது பராமரிப்பு நடவடிக்கைகள், பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகள், கண்ணாடிப் பெட்டிகளிலுள்ள தொல்பொருட்களின் பாதுகாப்பு, பராமரிப்பு நடவடிக்கைகள், சமுத்திர தொல்பொருளியல் பிரிவின் முன் பகுதியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள பாரந்தூக்கி ஆகியவற்றைப் பேணிப் பாதுகாத்தல்களும் இவ்வருடத்தில் இடம்பெற்றன.

அத்துடன் காலிக் கோட்டையினுள் ஒல்லாந்தரின் களஞ்சியசாலை அமைந்துள்ள பிரதேசத்தில் நாளாந்த பராமரிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன் றுஹுாணு பல்கலைக் கழக தொல்பொருளியல் பீடத்தின் இறுதியாண்டு மாணவர்களின் பங்களிப்புடன் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் பற்றிய செயலமர்வுகள், கண்காட்சிகள் ஆகியவை வருடம் முழுவதும் நடாத்தப்பட்டன.

சமுத்திர தொல்பொருளியல் பிரிவின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் தொல்பொருட்களின் பராமரிப்பு

நூதனசாலையின் முன்பாக வைக்கப்பட்டிருக்கும் இரும்பு நங்கூரத்தைப் பேணிப்பாதுகாத்தல்

வடமேல் மாகாண கலாசார சதுக்கம்

யாபஹுூவ வேலைத்தளம்

அகழ்வாராய்ச்சிப் பிரிவு

யாபஹுூவ கருத்திட்டத்தின் கீழ் பிட்ட திய அகழி, குருகொட மெகாலிதிக் மயானம், நாகொல்ல பதாநகர தொகுதி, குருகொட தூபி ஆகிய தொல்பொருளியல்சார் பிரதேசங்களில் இவ்வருடம் அகழ்வாராய்ச்சிகள் நடாத்தப்பட்டன.

அத்துடன் புராதன ராஜதானியாக விளங்கிய யாபஹுூவ பூமியில் அமைந்துள்ள கற்குகைகளில் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

D13 என இலக்கமிடப்பட்ட கற்குகையினுள் கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் போது எல்லைக் குறிப்புகள், சந்திரவட்டக்கல், வாயிற் காவற்கல் ஆகிய தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

அத்துடன் ஊக்குவிப்பு நடவடிக்கைகள், அகழ்வுகளின் அறிக்கை தயாரித்தல், மட்பாண்டங்களைப் பகுப்பாய்வு செய்தல் போன்ற நடவடிக்கைகள் வருடம் முழுவதும் இடம்பெற்றன.

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

இவ்வருடத்தினுள் படிக்கட்டுக்களின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள், இல.01 எனப் பெயரிடப்பட்ட கற்குகை அகழ்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட அணைக்கட்டுத் துண்டு, பிட்ட திய அகழி, பொது சுகாதார வசதிகள் போன்றவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2012 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின்படி யாபஹுவ ரஜமகா விகாரையில் கோயில்மணியின் கோபுரக்கூரையை மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கு உக்கிப் போயிருந்த மரத்துண்டுகள், உடைந்த கூரை ஆகியவற்றைப் புதுப்பித்து சாயம் பூசப்பட்டு பேணிப் பாதுகாக்கப்பட்டன.

2012 ஆம் ஆண்டு பூர்த்தி செய்வதற்கு முடியாமற் போன படிக்கட்டுக்களின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டன. கடினமான பாதைகளைச் செப்பனிட்டு கற்கள் பதித்து இருமருங்கும் மதில் கட்டப்பட்டு நடைபாதை மறுசீரமைக்கப்பட்டது. தீர்மானிக்கப்பட்டிருந்த பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளில் 80% வீதமான பகுதிகள் இவ்வருடத்தினுள் பூர்த்தி செய்யப்பட்டன.

அத்துடன் 01 ஆம் இலக்க கற்குகை அகழ்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட மிக விசாலமான அணைக்கட்டு, இயற்கை அனர்த்தங்களுக்குள்ளான கட்டிட இடிபாடுகளை மறுசீரமைத்து மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது. இவ்வருட ஆகஸ்ட் மாதமளவில் இந்நடவடிக்கைகளின் 95 % வீதம் பூர்த்தி செய்யப்பட்டதுடன், 02 ஆம் இலக்க கற்குகை அகழ்வுகளும் இதே சமகாலத்தில் மேற்கொள்ளப்பட்டன.

2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் பிட்ட திய அகழியின் வடக்கு முனையிலிருந்து பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 21 அடி அகலமான பகுதி முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டு புற்கள் பதியப்பட்டுள்ளன.

சுகாதார வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், புதிதாக அலுவலகம் ஒன்றை அமைப்பதற்காக கொள்கலன் ஒன்று வைக்கப்பட்டு அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கருத்திட்ட வளவினுள் பராமரிப்பு நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக இடம்பெற்றன.

பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கையின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்

படிக்கட்டின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள்

அணைக்கட்டின் பேணிப் பாதுகாத்தல்கள்



யாபஹுவ விகாரைக் கோயில்மணியின் கோபுரக் கூரை மறுசீரமைப்பின் முன்னரும் பின்னரும்

தம்பதெனியா

அகழ்வாராய்ச்சிப் பிரிவு

இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் ருக்மலே கிரிகுகாராம புராதன மண்மேடு, தம்பதெனியா ஸ்ரீவிஜயசுந்தராராம விகாரை உபசரிப்பு மாட தெற்கு மதில், மாளிகாகல ஆகிய பிரதேசங்களின் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ருக்மலே கிரிகுகாராம விகாரையில் ''பண்டரல் சொரொவ்வ'' எனப்படும் வாவியின் அருகே அமைந்துள்ள மண்மேடு அகழ்வுக்குட்படுத்தப்பட்டது. நினைவுச் சின்னங்களோ தொல்பொருட்களோ எதுவுமே கிடைக்காத பட்சத்தில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு நிறுத்தப்பட்டன.

தம்பதெனியா ஸ்ரீவிஜயசுந்தராராம விகாரை உபசரிப்பு மாடத்தின் தென்பகுதியில் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கி ஆகஸ்ட் மாதம் வரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது புராதன மதிலின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

தம்பதெனியா மாளிகாகல சிறிய மலையுச்சியில் அமைந்திருந்த அரச மாளிகையொன்றின் முதற்கட்ட அகழ்வுகள் இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டன. அங்கே புராதன மாளிகை ஒன்றின் கட்டிடச் சிதைவுகள், அடித்தளத்தின் பாகங்கள், பழைய ஓடுகள், இரும்பு ஆணிகள், மட்பாண்டத் துண்டுகள் ஆகிய தொல்பொருளியல் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

அகழ்வாராய்ச்சிப் பிரிவின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

ருக்மலே கிரிகுகாராம புராதன மண்மேடு அகழ்வுக்கு முன்னர் தயார்நிலையில்

ஸ்ரீவிஜயசுந்தராராம விகாரை உபசரிப்பு மாடம் அகழ்வுக்கு முன்னர்

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

ஸ்ரீவிஜயசுந்தராராம ரஜமகா விகாரை அகழ்வுகளிலிருந்து கண்டெடுக்கப்பட்ட இனந் தெரியாத கட்டிடச் சிதைவுகள், மதிற் சிதைவுகள் ஆகிய எஞ்சியிருந்த தொல்பொருட்களை பேணிப் பாதுகாத்தல், யானை உருவ மதில் பேணிப் பாதுகாக்கப்படல், விகாரையின் வடக்கு வாயிற்புற படிக்கட்டுக்களைப் புதுப்பித்தல், டெம்பிட்ட விகாரையின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் போன்றவை இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

ஸ்ரீவிஜயசுந்தராராம ரஜமகா விகாரையில் அகழ்வுகளின் போது இனந் தெரியாத கட்டிடச் சிதைவுகள் கண்டெடுக்கப்பட்டு அங்கு எஞ்சியிருந்த தொல்பொருட்கள் யாவும் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

அத்துடன் இங்கிருந்த புராதன யானை உருவ மதில் அதன் புராதனத் தன்மையை இழந்து காணப்பட்டதால் மீண்டும் அவற்றைப் புராதன கற்கள் கொண்டு மறுசீரமைத்து பேணிப் பாதுகாக்கப்பட்டன.

ஸ்ரீவிஜயசுந்தராராம விகாரையின் வடக்கு வாயிற்புற படிக்கட்டினை புராதன கற்கள் கொண்டும், அதனையொத்த வேறு கற்கள் கொண்டும் மறுசீரமைக்கப்பட்டு பேணிப் பாதுகாக்கப்பட்டன.

அத்துடன் போதிவிருட்சத்தின் கிளையொன்று முறிந்து வீழ்ந்ததனால் சேதமுற்ற டெம்பிட்ட விகாரையினை மறுசீரமைத்து பேணிப் பாதுகாக்கப்பட்டன.

அத்துடன் இங்கு புராதன விகாரையின் வாயிற்படிகள் மீண்டும் மறுசீரமைத்துப் பேணப்பட்டன. அலுவலக வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு புதிதாக ஒரு கட்டிடம் அமைக்கப்பட்டது.

சுவரோவியப் பேணல் பிரிவின் மூலம் நக்காவத்த டெம்பிட்ட விகாரையின் சுவரோவியங்கள் பேணப்பட்டன. கோந்துருவாபொல டெம்பிட்ட விகாரை, மெட்டியகனே ரஜமகா விகாரை ஆகியவற்றின் சுவரோவியங்களும் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

இங்கு நக்காவத்த டெம்பிட்ட விகாரையினுள் மரத்தினால் செய்யப்பட்ட பகுதிகள், சுவர்ப்பகுதிகள் ஆகியவற்றை கறையான் மற்றும் குளவிகள் சேதப்படுத்துவதால், அவைகளை அழிப்பதற்கும், சுவர்களை உறுதியாக அமைப்பதற்கும், வர்ணப் பூச்சுக்கள் சேதமாகியிருப்பதனால் அவற்றை மறுசீரமைப்பதற்கும், சுவரின் கட்டுமானப் பணிகள் சேதமுற்று இருப்பதனால் அவற்றை மறுசீரமைப்பதற்கும், அழிந்து போயிருக்கும் சுவரோவியங்களை மீண்டும் புதுப்பிப்பதற்கும், அரைப் பகுதி அழிந்து போயிருந்த மகர தோரணத்தினை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன், கோந்துருவாபொல விகாரையின் சுவரோவியங்கள், சிலைகள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு வலைக்கம்பிகளால் மறைத்துக் கட்டி பேணப்பட்டமை, மற்றும் புதையல் தோண்டுபவர்களால் சேதப்படுத்தப்பட்ட பிரதான புத்தர் சிலை மற்றும் சிறிய சிலைகள் ஆகியவை மறுசீரமைக்கப்பட்டு பேணப்பட்டமை, அழிந்து போன மகர தோரணத்தினை மறுசீரமைத்துப் பேணப்பட்டமை, சுவரோவியங்களை மறுசீரமைத்து வர்ணம் தீட்டிப் பேணிப் பாதுகாக்கப்பட்டமை போன்ற பல நடவடிக்கைகள் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

பேணிப் பாதுகாத்தல் பிரிவின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

விஜயசுந்தராராம டெம்பிட்ட விகாரையை மறுசீரமைக்கும் போது



நக்காவத்த டெம்பிட்ட விகாரையின் சுவரோவியங்கள், சிலைகள் மறுசீரமைக்கப்பட முன்னரும் பின்னரும்

நக்காவத்த டெம்பிட்ட விகாரையின் மகர தோரணம் மறுசீரமைக்கப்பட முன்னரும், பின்னரும்



கோந்துருவாபொல டெம்பிட்ட விகாரையின் புத்தர் சிலை மறுசீரமைக்கப்பட முன்னரும், பின்னரும்

பண்டுவஸ்நுவர வேலைத்தளம்

அகழ்வாராய்ச்சிப் பிரிவு

இவ்வருடத்தில் நிக்கசலா நுவர ரஜமகா விகாரையின் சுற்றுமதிலை மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் இரண்டாம் கட்ட அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது முழுமையாக சுற்றுமதில் அகழ்வுக்குட்படுத்தப்பட்டு, வட திசையிலிருந்த வாயில் ஒன்றையும் இனங்காணக் கூடியதாக இருந்தது. இறுதிக் கட்டம் வரை இங்கு அகழ்வுகள் இடம்பெற்றன.

அத்துடன் 01 A ஆம் இலக்கக் கட்டிடத்தின் அகழ்வுகளும் இடம்பெற்றன. கற் பலகைகள் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள செவ்வக வடிவிலான இக்கட்டிடம் தற்போது நிக்கசலா நுவர மேல் விகாரைக்கு உட்செல்லும் பாதையின் இடது பக்கத்தில் அமைந்துள்ளது.

இவ்வருடத்தில் 02 ஆம் இலக்கக் கட்டிடத்தின் இரண்டாம் கட்ட அகழ்வுகளும் இடம்பெற்றன. இக்கட்டிடத்தில் தான மண்டபம் ஒன்றும் அமைந்துள்ளதுடன், அங்கேயிருந்து பெருமளவு மட்பாண்டங்களும் கண்டெடுக்கப்பட்டன.

பண்டுவஸ்நுவர ரஜமகா விகாரைத் தடாகத்தின் முன்பாக 01 ஆம், 02 ஆம் இலக்க (PNB 01-02) கட்டிடச் சிதைவுகளினுள் மேலும் அகழ்வுகள் நடாத்தப்பட்டன.

நிக்கசலாநுவர தடாகத்தின் அகழ்வுகள் (NNPO) இவ்வருடத்தில் இடம்பெற்ற விசேட கருத்திட்டமாகும்.

புதையல் கொள்ளையர்களால் சேதப்படுத்தப்பட்டிருந்த நாதகனே தூபியின் அகழ்வு நடவடிக்கைகள் இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்களுள் ஒன்றாகும்.

அகழ்வாராய்ச்சிப் பிரிவின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

நிக்கசலா நுவர ரஜமகா விகாரைச் சுற்றுமதில் அகழ்வுகளுக்கு முன்னரும், பின்னரும்

நிக்கசலா நுவர 01 A ஆம் இலக்கக் கட்டிட அகழ்வுகளுக்கு முன்னரும், பின்னரும்

நிக்கசலா நுவர 02 ஆம் இலக்க கட்டிட இரண்டாம் கட்ட அகழ்வுகளுக்கு முன்னரும், பின்னரும்

பண்டுவஸ்நுவர ரஜமகா விகாரைத் தடாகத்தின் முன்பாக 01 ஆம், 02 ஆம் இலக்க கட்டிட அகழ்வுகளின் முன்னரும், பின்னரும்

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

இதன் கீழ் பின்வரும் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

1. பண்டுவஸ்நுவர பிக்குமார் தங்குமிடம், பிரிவெனா ஆகியவற்றுக்கு இடையிலுள்ள கட்டிடச் சிதைவுகளை பேணிப் பாதுகாத்தல்
2. டெம்பிட்ட விகாரை மற்றும் சிலைக்கூடம் பேணிப் பாதுகாத்தல்
3. நிக்கசலாநுவர தடாகத்தின் பேணிப் பாதுகாத்தல்
4. நிக்கசலாநுவர 01 ஆம் இலக்கக் கட்டிடம் பேணிப் பாதுகாத்தல்

பிக்குமார் தங்குமிடம், பிரிவெனா ஆகியவற்றுக்கு இடையிலுள்ள PNB 01 ஆம் இலக்கக் கட்டிடம் நவீன தொழில்நுட்ப முறையில் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

அத்துடன் இவ்விகாரைத் தொகுதியில் திறந்த வெளி விறாந்தையின் கூரை மற்றும் நிலம் பேணிப் பாதுகாக்கப்பட்டதுடன், டெம்பிட்ட விகாரையின் நிலக்கீழ்த் தளத்திலுள்ள சித்திரங்கள், சிலைகள் ஆகியவையும் பேணிப் பாதுகாக்கப்பட்டன. முன்பகுதியிலுள்ள தோரணம் மற்றும் அங்குள்ள கூரை, கட்டிடச் சிதைவுகள், சித்திரங்கள் என்பனவும் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

இவ்விகாரையின் கிழக்குத் திசையில் அமைந்துள்ள தடாகம் அகழ்வுக்குட்படுத்தப்பட்டு பேணிப் பாதுகாக்கப்பட்டது.

இவ்விகாரையின் தெற்குத் திசையில் வாஸ்து விஞ்ஞான ரீதியாக அமைக்கப்பட்டுள்ள 01 ஆம் இலக்க கட்டிடம் பேணிப் பாதுகாக்கப்பட்டது.

பேணிப் பாதுகாத்தல் பிரிவின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

பண்டுவஸ்நுவர பிக்குமார் தங்குமிடம், பிரிவெனா ஆகியவற்றுக்கு இடையிலுள்ள கட்டிடச் சிதைவுகளை பேணிப் பாதுகாத்தலுக்கு முன்னரும், பின்னரும்



டெம்பிட்ட விகாரை மற்றும் சிலைக்கூடம் பேணிப் பாதுகாத்தலுக்கு முன்னரும், பின்னரும்

தடாகத்தின் பேணிப் பாதுகாத்தலுக்கு முன்னரும், பின்னரும்

நிக்கசலாநுவர தடாகத்தின் பேணிப் பாதுகாத்தலுக்கு முன்னரும், பின்னரும்

குருநாகல் வேலைத்தளம்

அகழ்வாராய்ச்சிப் பிரிவு

இத்திட்டத்தின் கீழ் றிதீ விகாரையின் செரசும்கல தடாகத்தின் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு, புராதன மதிற்கட்டு ஒன்றின் சிதைவுகளைக் கண்டெடுக்கும் நோக்குடன் மேற்கொண்ட இவ்வகழ்வுகள் இவ்வருடத்தினுள் பூர்த்தி செய்யப்பட்டன.

அத்துடன் றிதீ விகாரை வளவின் புராதன குகைகளின் அகழ்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

செரசும்கல தடாகத்தின் அணைக்கட்டு மறுசீரமைக்கப்பட்டு பேணிப் பாதுகாக்கப்பட்டதுடன், இவ்வருடத்தினுள் அவை பூர்த்தி செய்யப்பட்டன.

அத்துடன் செரசும்கல படிக்கட்டினை இருமருங்கிலுமுள்ள அணைக்கட்டு மறுசீரமைக்கப்பட்டு பேணிப் பாதுகாக்கப்பட்டமையும் இடம்பெற்றன.

அத்துடன் றிதீ விகாரையின் சிலைக்கூட சுற்றுமதிலில் சேதமுற்றிருந்த இடைத்தூண்கள் அகற்றப்பட்டு புதிதாக லாக்ஸா முறையில் தயாரிக்கப்பட்ட இடைத்தூண்கள் அமைக்கப்பட்டன. விகாரையின் ஹேவிசி வாத்திய மண்டபம், பிக்குமார் தங்குமிடத்தின் அருகேயுள்ள கருங்கல் அணைக்கட்டு, குமார பண்டார தேவாலயக் கூரை, பத்தினி தேவலாயக் கூரை மற்றும் தகனக் கிரியைகளுக்கான கட்டிடம் ஆகிய புராதன சின்னங்கள் மறுசீரமைத்து பேணிப் பாதுகாக்கப்பட்டன.

அத்துடன் றிதீ விகாரையின் நாளாந்த பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் தொல்பொருளியல் சின்னங்களைப் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்றன.

பட்டலீய மாதிரி உருவமைப்புக் கல்வி நிகேதனம்

இத் திட்டம் பயிற்சிக் கல்வி, உற்பத்தி, விற்பனை ஆகிய மூன்று பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. 2013 ஆம் ஆண்டில் இந்த மூன்று பிரிவுகளிலும் காணப்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு காணப்பட்டது.

01. பயிற்சிக் கல்விப் பிரிவு

ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் நடாத்தப்பட்ட செயன்முறைப் பரீட்சைகளின் பிரகாரம் இப்பிரிவிற்குப் புதிதாக பின்வரும் எண்ணிக்கயான மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

பயிற்சி நெறி	2013 இல் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர் எண்ணிக்கை
கற் செதுக்கு வேலைப்பாடு	02
பித்தளை உருக்கு வேலைப்பாடு	04
மரச் செதுக்கு வேலைப்பாடு	06
செரமிக் வேலைப்பாடு	03

இதன் பிரகாரம் ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் உரிய கல்வி நடவடிக்கைகள், மாதாந்த விசேட பயிற்சிகள், கல்விச் சுற்றுலா ஆகிய நிகழ்ச்சிகள் வருடம் முழுவதும் இடம்பெறுகின்றன.

02. உற்பத்திப் பிரிவு

2013 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் ஒக்டோபர் வரையான காலப் பகுதியினுள் பின்வரும் செயற்பாடுகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

01. துண்டு வேலை முறையின் பிரகாரம் மாதிரி உருவமைப்புக்களைத் தயாரித்து நூற்றுக்கு 40 % வீதமான இலக்கை எட்டியமை.
02. பெற்றுக் கொண்ட வெளியிட கட்டளைகளில் நூற்றுக்கு 70 % வீதமானவற்றைப் பூர்த்தி செய்து விநியோகித்தமை.
03. நிறுவனத்தின், கருத்திட்டங்களின் மற்றும் அமைச்சின் மூலம் பெற்றுக் கொண்ட கட்டளைகளில் நூற்றுக்கு 80 % வீதமானவற்றைப் பூர்த்தி செய்து விநியோகித்தமை.

இவை தவிர பின்வரும் விசேட செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

1. “தெயட்ட கிருள” எனப்படும் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சிக்குரிய விற்பனைக் கூடங்கள் அலங்கரித்தமை.
2. அரந்தலாவ வாயிற்கடவையின் வேலைப்பாடுகளைப் பூர்த்தி செய்தமை.
3. பளல்ல ஆரம்பப் பாடசாலைக்கு எஸ். மகிந்த தேரரின் சிலை செய்து வழங்கியமை.
4. 2013 ஆம் ஆண்டு மேதின ஊர்வல இரதத்தினை அலங்கரித்தமை.
5. வெசாக் வைபவத்தின் போது கொழும்பு இசிபத்தன வித்தியாலயத்தின் கண்காட்சிக் கூடங்களை அலங்கரித்தமை.
6. வெசாக் வைபவத்தின் போது கொழும்பு பௌத்தாலோக மாவத்தையில் நான்கு வெசாக் இரதங்கள் தயாரித்து அலங்கரித்தமை.
7. மஹர வெசாக் வலய செயற்பாடுகள் மேற்கொண்டமை.
8. சந்தகிரிசேய புதையற் பொருட்களை ஒழுங்கமைத்தமை.
9. சியாம் நிக்காய உபாலி தேரரின் சிலையை மரத்தினால் உருவாக்கியமை.

03. விற்பனைப் பிரிவு

இப்பிரிவில் பயிற்சி பெற்ற மாணவர்களாலும் மற்றும் நிரந்தரக் கலைஞர்களாலும் துண்டு வேலை முறைப்படி உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு விற்பனைப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இதன் பிரகாரம் மத்திய கலாசார நிதியத்தின் ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் மாதிரி உருவமைப்பு விற்பனை சாலைகளுக்குத் தேவையான உற்பத்திப் பொருட்களைத் தயாரித்து வருடம் முழுவதும் விநியோகித்து வருகின்றனர்.

மாதிரி உருவமைப்பு கல்வி நிகேனத்தின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

சுவரோவியங்களைப் பிரதி செய்யும் பிரிவு

கற் செதுக்கு வேலைப்பாடுகள் பிரிவு

மரச் செதுக்கு வேலைப்பாடுகள் பிரிவு

மத்திய கலாசார நிதியத்தின் வெளியீட்டுப் பிரிவு

வெளியீட்டுப் பிரிவின் கீழ் வெளியீடுகள், அச்சுப் பதிவுகள், பிரச்சாரங்கள், நிழற்படங்கள், ஆவணப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், ஏட்டுச் சுவடிகளின் ஆய்வுகள், பேணிப் பாதுகாத்தல்கள், நிரற் படுத்தல்கள், புத்தக விற்பனைகள் ஆகிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதைத் தவிர, இப்பிரிவின் கீழ் இயங்கும் நூலகமும் அமைந்துள்ளது.

இதன் பிரகாரம் இவ்வருடத்தில் ஜனவரி தொடக்கம் செப்டம்பர் வரையான காலப்பகுதியினுள் பின்வரும் முறையில் நூல்கள் வெளியிடப்பட்டன.

1. கையெழுத்துப் பிரதிகள் தட்டச்சுப்பதிவு வசமிருக்கின்ற நூல்கள் - 09
2. திருத்தங்கள் மற்றும் செவ்வை பார்த்தலில் உள்ள நூல்கள் - 15
3. அச்சுப் பதிவுக்காக இறுதியாக முடிவுறுத்தப்பட்ட நூல்கள் - 15

இவை தவிர, கீழ்க் காணும் தெளிவூட்டல் நிகழ்ச்சிகள் மற்றும் விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் ஆகியவை வெளியீட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட மிக விசேடமான நடவடிக்கைகளாகும்.

- இசிபத்தன வித்தியாலயத்தில் வெசாக் வலயத்திற்கான புத்தகக் கண்காட்சியும், விற்பனை நிலையமும் அமைத்தமை.
- கடவத்தை மஹர வெசாக் வலயத்திற்கான ஏட்டுச் சுவடிகள், மாதிரி உருவமைப்புக்களின் கண்காட்சிக் கூடம் அமைத்தமை
- பூகொட ஓவிட்டிகம ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு விசேட கருத்தரங்குகள் நடாத்தப்பட்டமை.
- இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற தெற்காசிய உரிமைகள் சங்க மாநாட்டிற்காக புத்தகக் கண்காட்சியும், விற்பனை நிலையமும் நடாத்தப்பட்டமை.
- பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் புத்தகக் கண்காட்சி நடாத்தப்பட்டமை.

இவற்றைத் தவிர, 2013 ஆம் ஆண்டில் 09 நூல்கள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதுடன், மேலும் 03 நூல்கள் அச்சிடப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையிலுள்ளன. அத்துடன் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கான நுழைவுச் சீட்டுகள், துண்டுப் பிரசுரங்கள், பதாகைகள் மற்றும் வவுச்சர் உறுதிச் சீட்டுப் பத்திரங்கள், அழைப்பிதழ்கள் ஆகியனவும் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டு வருகின்றன.

பிரச்சாரப் பிரிவின் கீழ் பின்வரும் செயற் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- உத்தம லங்கா நிகழ்ச்சித் திட்டம்
- குருநாகல் மாவட்டத்தில் மக்கள் வாழ்க்கை மற்றும் கலாசார பெறுமதிகள் பற்றி தீர்மானிக்கப்பட்ட கூற்றின் பிரகாரம் தகவல்கள் சேகரித்தல் மற்றும் 15,000 நிழற்படங்கள் சேகரித்தல் நடவடிக்கைகள்.
- தென் பகுதி உல்லாசப் பிரயாணத் துறைக்கான தொழில்நுட்ப ரீதியாக அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் மூலம் பிரச்சாரங்கள் மேற்கொள்ளல்.
- தென் பகுதியில் வரலாற்றுச் சிறப்பு மிக்க மற்றும் தொல்பொருளியல் பிரதேசங்களில் ஆய்வுகள் மற்றும் நிழற்படங்கள் சேகரித்தல்.

- ‘‘லஸ்ஸன ஹக்மன’’ பொசொன் வலயத்தினதும், சித்தம்கல்லென விகாரையினதும் வருடாந்த பெரஹர ஊர்வலத்தில் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

இவற்றைத் தவிர, புகைப்படங்கள் பிரிவினால், தொல்பொருளியல் பிரதேசங்களின் நிழற்படங்களைச் சேகரித்து அவற்றை ஆவணப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் நூலகப் பிரிவினால், சகல நூல்களினதும் சுட்டிகளைத் தயாரித்து ஒழுங்கமைத்தல், வகைப்படுத்தல், ஏட்டுச் சுவடிகளின் ஆய்வறிக்கைகளை ஆவணப்படுத்தல் ஆகியவையும் மேற்கொள்ளப்பட்டன.

மத்திய கலாசார நிதியத்தின் 2013 ஆம் ஆண்டிற்கான வெவ்வேறு செயற்பாடுகள்

- புனித தலங்களின் நிர்மாணப் பணிகள், பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்புகள்

  நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள புனித தலங்களின் புதிய நிர்மாணப் பணிகள், பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்புகள் தொடர்பான நடவடிக்கைகளுக்காக 2013 ஆம் ஆண்டினுள் நன்கொடைகளாக 3,630,000.00 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

- புனித தலங்களின் வருடாந்த விழா மற்றும் பெரஹராக்களுக்காக நிதியுதவிகள் வழங்குதல்

  நூடளாவிய ரீதியில் அமைந்துள்ள புனித தலங்களின் வருடாந்த விழா மற்றும் பெரஹராக்களுக்காக 2013 ஆம் ஆண்டினுள் நிதியுதவிகளாக 1,430,000.00 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

- ஏனைய கலாச்சார நடவடிக்கைகளுக்காக நிதியுதவிகள் வழங்குதல்

  நாட்டிய நாடக நிகழ்ச்சிகள், போயா தின நிகழ்ச்சிகள், ஏனைய சமய நிகழ்ச்சிகள் மற்றும் கலாச்சார மாநாடுகள் ஆகியவற்றிற்காக மத்திய கலாசார நிதியத்தின் மூலம் இவ்வருடத்தினுள் நிதியுதவிகளாக 16,046,000.00 ரூபா வழங்கப்பட்

மத்திய கலாசார நிதியம்
2013 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு வருட இறுதி
நிதிப் பிரவாகக் கூற்று

<u>செயல்முறை நிகழ்ச்சித் திட்டங்களால் ஈட்டிய நிதி வளங்கள்</u>		
வருடத்திற்கான மேலதிகம் / குறைபாடுகள்		302,069,092
<u>ஒப்பீடுகள் - நிதி தொடர்பற்ற திட்டங்கள்</u>		
தேய்மானங்கள்	42,359,757	
முன்னைய வருடத்தினுடன் ஒப்பிடுகை	12,216,770	
நிலையான சொத்துக்களை அகற்றியதனால் ஏற்பட்ட இலாபம்	351,811	
சன்மானங்களுக்கான ஒதுக்கீடு	66,949,750	121,878,087
செயற்படு மூலதனத்தின் வேறுபாடுகள்		**423,947,179**
பெற்றுக்கொள்ளப்பட வேண்டியவை	(45,239,226)	
தொகை	(13,768,030)	
சேர்ந்து திரண்ட கொடுப்பனவுகள்	56,714,998	(2,292,258)
செயல்முறை நிகழ்ச்சித் திட்டங்களால் ஈட்டப்பட்ட தேறிய நிதி		**421,654,921**
<u>முதலீடுகளால் ஏற்பட்ட நிதிப் பிரவாகம்</u>		
நிலையான சொத்துக்களின் கொள்வனவு	(135,260,732)	
முதலீடுகள் (கூடுதல் / குறைதல்)	(231,772,834)	
நீண்ட கால முதலீடுகள் (கூடுதல் / குறைதல்)	(38,764,449)	
முதலீட்டுத் திட்டங்களால் ஈட்டப்பட்ட தேறிய நிதி		**(405,798,015)**
<u>நிதி நடவடிக்கைகளால் ஈட்டிய நிதி</u>		
வெளிநாட்டுச் செலாவணி நிதி	21,695,875	
சன்மானக் கொடுப்பனவுகள்	(27,100,958)	
விசேட உதவி கருத்திட்டங்கள்	(606,215)	
வெளிநாட்டு உதவி கருத்திட்டங்கள்	(830,954)	
நிதி நிகழ்ச்சித் திட்டங்களின் பாவனை		**(6,011,298)**
தேறிய நிதிக் குறைப்பு - நிதி மற்றும் பணம் ஆகியவற்றின் சம தொகை		**9,845,608**
வருட ஆரம்பத்திலிருந்த நிதி மற்றும் பணம் ஆகியவற்றின் சமதொகை		66,919,896
வருட இறுதியிலிருந்த நிதி மற்றும் பணம் ஆகியவற்றின் சமதொகை		76,765,504

மத்திய கலாசார நிதியம்
2013 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு வருட இறுதி
வருமானங்கள் செலவினங்களின் கணக்கு

	2013 (ரு)	2012 (ரு)
வருமானங்கள்		
நுழைவுச் சீட்டு விற்பனை	1,748,439,894	1,348,775,095
பிரதி உருவங்களின் விற்பனை	(1,152,741)	(1,420,042)
வெளியீடுகளின் விற்பனை	1,893,075	4,960,357
அச்சகத்தின் வருமானங்கள்	1,245,586	462,561
அரச நிதி (திறைசேரி வருமானங்கள்)		34,500,000
முதலீடுகள்	53,063,839	33,883,468
ஏனைய வருமானங்கள்	15,267,732	8,008,810
	1,818,757,387	**1,429,170,249**
செலவினங்கள்		
சம்பளங்கள், வேதனங்கள், ஊழியர் கொடுப்பனவுகள்	919,234,392	759,032,384
சன்மானங்கள்	66,949,750	31,636,288
நிலையான சொத்துக்களின் தேய்மானங்கள்	42,359,757	26,165,069
விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள்	17,162,616	10,215,791
வழங்கல் மற்றும் பாவனைப்பொருட்கள்	136,839,850	184,750,332
சொத்துக்கள், பொருட்களின் புதுப்பித்தல்கள்	37,778,087	37,576,846
ஒப்பந்த சேவைகள்	40,732,730	32,531,571
மொத்த நிதிச் செலவினங்கள்	135,429	112,345
கணக்காய்வுக் கட்டணங்கள்	250,000	200,000
நன்கொடைக் கொடுப்பனவுகள்	22,316,300	
ஏனைய செலவுகள்	232,929,384	119,654,891
	1,516,688,295	**1,201,875,516**
வருடத்திற்கான மேலதிகம் / குறைபாடுகள்	**302,069,092**	**227,294,733**

மத்திய கலாசார நிதியம்
2013 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு வருட இறுதி
நிதிப் பிரவாகக் கூற்று

<u>செயல்முறை நிகழ்ச்சித் திட்டங்களால் ஈட்டிய நிதி வளங்கள்</u>		
வருடத்திற்கான மேலதிகம் / குறைபாடுகள்		302,069,092
<u>ஒப்பீடுகள் - நிதி தொடர்பற்ற திட்டங்கள்</u>		
தேய்மானங்கள்	42,359,757	
முன்னைய வருடத்தினுடன் ஒப்பிடுகை	12,216,770	
நிலையான சொத்துக்களை அகற்றியதனால் ஏற்பட்ட இலாபம்	351,811	
சன்மானங்களுக்கான ஒதுக்கீடு	66,949,750	121,878,087
செயற்படு மூலதனத்தின் வேறுபாடுகள்		**423,947,179**
பெற்றுக்கொள்ளப்பட வேண்டியவை	(45,239,226)	
தொகை	(13,768,030)	
சேர்ந்து திரண்ட கொடுப்பனவுகள்	56,714,998	(2,292,258)
செயல்முறை நிகழ்ச்சித் திட்டங்களால் ஈட்டப்பட்ட தேறிய நிதி		**421,654,921**
<u>முதலீடுகளால் ஏற்பட்ட நிதிப் பிரவாகம்</u>		
நிலையான சொத்துக்களின் கொள்வனவு	(135,260,732)	
முதலீடுகள் (கூடுதல் / குறைதல்)	(231,772,834)	
நீண்ட கால முதலீடுகள் (கூடுதல் / குறைதல்)	(38,764,449)	
முதலீட்டுத் திட்டங்களால் ஈட்டப்பட்ட தேறிய நிதி		**(405,798,015)**
<u>நிதி நடவடிக்கைகளால் ஈட்டிய நிதி</u>		
வெளிநாட்டுச் செலாவணி நிதி	21,695,875	
சன்மானக் கொடுப்பனவுகள்	(27,100,958)	
விசேட உதவி கருத்திட்டங்கள்	(606,215)	
வெளிநாட்டு உதவி கருத்திட்டங்கள்	(830,954)	
நிதி நிகழ்ச்சித் திட்டங்களின் பாவனை		**(6,011,298)**
தேறிய நிதிக் குறைப்பு - நிதி மற்றும் பணம் ஆகியவற்றின் சம தொகை		**9,845,608**
வருட ஆரம்பத்திலிருந்த நிதி மற்றும் பணம் ஆகியவற்றின் சமதொகை		66,919,896
வருட இறுதியிலிருந்த நிதி மற்றும் பணம் ஆகியவற்றின் சமதொகை		**76,765,504**

மத்திய கலாசார நிதியம்
2013 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு வருட இறுதியில் அத்தியாய மாற்றங்கள் பற்றிய கூற்று

	திரட்டிய நிதி	மூலதன ஒதுக்கம்	உள்ளபடி ஒதுக்கம்	வெளிநாட்டு ஒதுக்கம்	ஒதுக்கங்களின் மேலதிகம்	மொத்தத் தொகை
2011.01.01 ஆந் திகதிக்கு மீதி	19,944,705	16,064,386			43,307,453	79,316,544
கூட்டப்பட்டது						
உள்ளபடியான மேலதிகம்			451,428,000			451,428,000
வெளிநாட்டு நிதியம்				365,540,429		365,540,429
வருடத்திற்கான மேலதிகம்					227,294,733	227,294,733
முன்னைய வருடத்துடன் ஒப்பீடு					(3,280,602)	(3,280,602)
	19,944,705	16,064,386	451,428,000	365,540,429	267,321,584	1,120,299,104
கழிக்கப்பட்டது						
தேய்மானங்களுக்கான ஒதுக்கீடு				(40,722,676)		(40,722,676)
2012.12.31 ஆந் திகதிக்கு மீதி	**19,944,705**	**16,064,386**	**451,428,000**	**324,817,753**	**267,321,584**	**1,079,576,428**
கூட்டப்பட்டது						
வெளிநாட்டு நிதியம்				(21,695,872)		(21,695,872)
வருடத்திற்கான மேலதிகம்					302,069,092	302,069,092
முன்னைய வருடத்துடன் ஒப்பீடு						
	19,944,705	16,064,386	451,428,000	303,121,881	569,390,676	1,359,949,648
கழிக்கப்பட்டது						
முன்னைய வருடத்துடன் ஒப்பீடு			(4,033,000)		12,216,770	8,183,770
2013.12.31 ஆந் திகதிக்கு மீதி	**19,944,705**	**16,064,386**	**447,395,000**	**303,121,881**	**581,607,446**	**1,368,133,418**

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } சீஎம்1/ஏ/சீசீஎப்/1/13/24 | ඔබේ අංකය / உமது இல. / Your No. } | දිනය / திகதி / Date } 2015 பெப்ரவரி 28

பணிப்பாளர் நாயகம்,

மத்திய கலாசார நிதியம்

மத்திய கலாசார நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1980 இன் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 9(4) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மத்திய கலாசார நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1980 இன் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 9(2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 9(4) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மத்திய கலாசார நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 தொடர்புடைய தரப்பினருடன் ஏற்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை

கலை, கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்ட தனியார் கம்பனியான வ/ப கலாசார பாதுகாப்பு மற்றும் நிர்மாணக் கம்பனி, நிதியத்தின் நிர்மாண மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒப்பந்த அடிப்படையில் நிறைவேற்றுவதுடன் மீளாய்வாண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட தொழிலாளர்களுக்காக ரூபா 114.8 மில்லியன் கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இக் கம்பனியின் ஒரே வருமானம் நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவு மாத்திரமாக இருந்ததுடன் கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு நிதியத்தின் இரண்டு பணிப்பாளர்களும், நிதியத்தின் கணக்காளர் ஒருவர் கம்பனியின் கணக்காளராகவும் செயற்படுகின்றனர். மத்திய கலாசார நிதியத்திற்கும் கலாசார பாதுகாப்பு தனியார் நிர்மாணக் கம்பனிக்குமிடையே காணப்படுகின்ற இந்த தொடர்பின் தன்மை மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் கொள்கை

ஐயக் கடன் ஏற்பாடு தொடர்பாக நிதியத்தால் பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கடன் அறவிடும் இயலுமை மீளாய்வு செய்யப்படாமல் முன்னைய ஆண்டின் ஐயக் கடனாக ஒதுக்கப்பட்ட தொகைக்குச் சமனான தொகை அதாவது ரூபா 1,964,833 தொகை மீளாய்வாண்டின் போதும் ஐயக் கடனாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட ரூபா 106,469,071 கிரயமான தளபாடங்கள், பொருத்திகளும் உபகரணங்களும் மற்றும் ரூபா 3,509,828 கிரயமான கட்டிடங்களிலிருந்து பாவனைக்கு எடுக்க முடியுமான சொத்துக்களை இனங்கண்டு அந்த சொத்துக்களின் நியாயமான பெறுமதி தீர்மானிக்கப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஏலமிடப்பட்ட மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் அழிக்கப்பட்ட உடைந்த பொருட்களின் 6984 அலகுகளின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு என்பவற்றை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட 98 வாகனங்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் 39 வாகனங்கள் மாத்திரம் ரூபா 20,940,000 தொகைக்கு மீள் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தன. மீள் கணிப்பீடு செய்யப்பட்ட 5 வாகனங்களின் மீள் கணிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 2,055,000 தொகை கணக்குகளிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. ரூபா 14,252,724 கிரயமான எஞ்சிய 59 வாகனங்களையும் மீள் கணிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வெளிநாட்டு உதவி மானியமாக 1984 முதல் 2004 வரையான காலப்பகுதியில் நிதியத்திற்குக் கிடைத்த 11 வாகனங்கள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணியின் பெறுமதி ரூபா 4,064,443 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த காணியின் உரித்து நிதியத்திற்கு உரித்தற்றமையால் உரித்து தொடர்பாக ஏற்பட்ட வரையறை தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) சுனாமி நூதனசாலை ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2005 ஆம் ஆண்டின் போது ரூபா 2,558,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட காலி நுககஹவத்தை காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக் காணி கலை, கலாசார அலுவல்கள் அமைச்சுக்குக் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு கையளிப்பதற்காக 2014 நவம்பர் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) முன்னைய ஆண்டில் மீள் கணிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களுக்குரிய பெறுமானத் தேய்வு ரூபா 1,050,000 தொகை சொத்து மீள் கணிப்பீட்டு ஒதுக்கத்திற்கு வரவு வைக்கப்படாமல் வெளிநாட்டு வள நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டமை காரணமாக வெளிநாட்டு வள நிதியத்தின் மீதி அப் பெறுமானத்தினால் குறைவாகவும் சொத்து மீள் கணிப்பீடு ஒதுக்கம் அப் பெறுமானத்தினால் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்காக செலவிடப்பட்ட ரூபா 3,426,261 தொகை நிதியத்தின் விளம்பரச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) சுற்றுலா நுழைவுச்சீட்டுக்களை அச்சிடுவதற்காக செலவிடப்பட்ட ரூபா 4,189,480 தொகையான அச்சிடல் பொருட்கள் கொள்வனவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) பாவனையிலிருந்து அகற்றப்பட்டு விற்பனை செய்யப்பட்ட ரூபா 728,050 கிரயமான சொத்துக்களின் பெறுமதி மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு என்பன கணக்குகளில் இருந்து அகற்றப்படாமல் ஏல விற்பனையிலிருந்து கிடைத்த ரூபா 99,650 மாத்திரம் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் போது ரூபா 4,280,060 கிரயமான உப உற்பத்தி மற்றும் உற்பத்திப் பொருட்களும், ரூபா 331,049 கிரயமான பதிப்பு இருப்புக்களும் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்ததுடன் நன்கொடையாக ரூபா 331,049 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் ரூபா 1,226,680 தொகை

விளம்பரச் செலவினமாகவும், ரூபா 3,053,380 தொகை ஏனைய கலாசார செயற்பாடுகளாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. உப உற்பத்தி மற்றும் பதிப்புக்கள் விற்பனை இலாப கணிப்பீட்டின் போது இந்த நன்கொடைகள் விற்பனைக் கிரயத்தில் கழித்துக் காட்டுவதற்குப் பதிலாக விற்பனையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் படி, கணிப்பீட்டு வழுவின் காரணமாக பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் ரூபா 5,680,221 தொகை அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஔ) வெளிநாட்டில் நடைபெற்ற வியாபாரக் கண்காட்சிக்காக சமர்ப்பிக்கப்பட்ட மற்றும் விசேட நபர்களுக்கு நன்கொடை அளிப்பதற்கு எடுத்துச் செல்லப்பட்ட விற்பனை விலை முறையே ரூபா 314,365 மற்றும் ரூபா 109,720 தொகையான உப உற்பத்தி மற்றும் பதிப்புக்கள் தொடர்பான எவ்வித சீராக்கமும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(க) 7 நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய வட்டி வருமானமான ரூபா 9,269,772 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காண்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு கணக்கு விடயங்களுக்கெதிரே காண்பிக்கப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

	விடயம்	பெறுமதி	சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்
(அ)	நடைமுறைச் சொத்துக்கள் – நானாவித கடன்பட்டோர்	420,817	கடன்பட்டோர் பட்டோலை
(ஆ)	நிலுவையான ஊழியர் கடன்	1,656,741	5 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய விழா மற்றும் விஷேட முற்பணம் மற்றும் இடர் கடன் மீதி தொடர்பான விரிவான தகவல்கள்
(இ)	பொலன்னறுவை புனித பூமியில் உள்ளக	29,235,550	கிரய மதிப்பீடு, பொறியியலாளர் சான்றிதழ், செய்யப்பட்ட வேலையறிக்கை, மற்றும்

	வீதிகளை அபிவிருத்தி செய்தல்			கொடுப்பனவுப் பட்டியல், மேற்கொள்ளப்பட்ட மேலதிக வேலைக்கான பரிந்துரையும் அங்கீகாரமும் தொடர்பான விபரம்
(ஈ)	10 விஷேட நிதிய செயற்திட்டங்கள்		8,803,143	ஒவ்வொரு நிதியத்திற்குரிய விரிவான கோவைகள் மற்றும் உபயோக ஆவணங்கள்
(உ)	3 வெளிநாட்டு நிதிய செயற்திட்டங்கள்		1,969,612	-மேற்படி-

2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 21 நிரந்தர ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய 5 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய ரூபா 316,171 தொகையான இடர்கடன், நிரந்தர பதவியணியினரில்லாத தொழிலாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய 6 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய ரூபா 366,721 தொகையான இடர் கடன் மற்றும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய அறவிட வேண்டிய ரூபா 1,290,020 தொகையான விழா மற்றும் விஷேட முற்பணங்கள் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்படாது காணப்பட்டது.

(ஆ) 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்படாது காணப்பட்ட ரூபா 914,785 தொகையான 15 கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2008 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 264,670 தொகையான தீர்க்கப்படாத கட்டு நிதி மீதியும், சீகிரிய செயற்திட்ட அலுவலகத்தால் பல்வேறு நிறுவனங்களுக்கு 1993 – 2000 காலப்பகுதியின் போது வழங்கப்பட்ட ரூபா 333,373 தொகையான முற்பணம் மற்றும் 7 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படுகின்ற நீதிமன்ற வைப்பு ரூபா 44,534 தொகையும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காணிப்பிக்கப்படுகின்றது.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமை
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை	
(i) VII அத்தியாயத்தின் 12.2.6 அம் பிரிவு	பதில் கடமை சம்பளம் செலுத்துவதற்கான அமைச்சுச் செயலாளரின் முன் அங்கீகாரம் பெறவேண்டிய போதிலும் 74 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது அங்கீகாரமின்றி ரூபா 2,187,644 தொகை செலுத்தப்பட்டிருந்தன.
(ii) XXXIII ஆம் அத்தியாயத்தின் 5 மற்றும் 6 ஆம் பிரிவுகள்	நிதியத்தின் உத்தியோகத்தர்கள் பிரதிவாதிகளாக மத்திய கலாசார நிதியத்திற்கு எதிராக வெளிநபர்களால் தொடரப்பட்ட வழக்கின் போது நிதியத்திற்காக செயற்படுவதற்கு சட்டமா அதிபரினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தும் அதற்குப் புறம்பாக சட்டமா அதிபரின் அங்கீகாரமின்றி வெளியிலிருந்து சட்டத்தரணிகளை சேவைக்குப் பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 440,000 செலுத்தப்பட்டிருந்தது.
(iii) XLVIII ஆம் அத்தியாயத்தின் 22.1 உப பிரிவில் திருத்தப்பட்ட 2004 திசெம்பர் 15 ஆந் திகதிய 6/2004 ஆம் இலக்க பொது நிர்வாக	2009 ஆம் ஆண்டின் போது வேலை நீக்கத்திற்குள்ளாக்கப்பட்ட உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்றுப் பரிசோதனை மேற்கொள்ளும் போது விரைவாக பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படாமையால் உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 407,719 தொகையான ஆதனக் கடனை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிட

	சுற்றறிக்கையின் II ஆம் பந்தி	முடியாதிருந்தது.
(ஆ)	1983 இன் 12 ஆம் இலக்க ஊழியர் பணிக்கொடை அதிகாரச்சட்டம்	இந்த அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஆறு மாத 158 பிரயோக பயிலுனர்களுக்காக 1,952,529 தொகை பணிக்கொடை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.
(இ)	2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய நி.தி.அ. 01/2010/01 ஆம் இலக்க நிதி திட்டமிடல் அமைச்சுச் சுற்றறிக்கையின் 6.1 ஆம் பந்தி மற்றும் 9(II) ஆம் பந்தி	இணைந்த படிகளுக்காக 24 மணித்தியாலங்களும் பூர்த்தியான நாள் எண்ணிக்கையை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய விமானப் பயண விபரம் (விமானம் பயணச்சீட்டின் பிரதி) சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் வெளிநாட்டுப் பயணத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,482,107 தொகை செலுத்தப்பட்டிருந்தது.
(ஈ)	2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி	பணிப்பாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ வாகனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் அளவு மாதமொன்றிற்கு 170 லீற்றாக இருந்த போதிலும் அதற்கு மேலதிகமாக கட்டளை அடிப்படையில் ரூபா 1,112,130 பெறுமதியான எரிபொருள் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. மேலும் ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கு உரித்தற்ற 3 உத்தியோகத்தர்களுக்கு வாகனங்கள் கையளிக்கப்பட்டு மாதமொன்றிற்கு 120 லீற்றர் படி கொடுப்பனவொன்று அங்கீகாரமின்றி வழங்கப்பட்டிருந்தது. அந்த இரண்டு உத்தியோகத்தர்களுக்கும் எரிபொருள் படிக்கு மேலதிகமாக மீளாய்வாண்டிற்காக முறையே ரூபா 263,784 தொகை மற்றும் ரூபா 484,484 பெறுமதியான மேலதிக எரிபொருள் வழங்கப்பட்டிருந்தன.
(உ)	2004 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 353(5) ஆம் இலக்கத்தின் 2 ஆம் பந்தி	வாடகை அடிப்படையில் பெறப்பட்ட 3 வேன் வாகனங்களுக்காக மாதாந்த வாடகை ரூபா 50,000, 45,000 மற்றும் 45,000 ஆக சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தது. வாகன வழங்குனர்களுடன் எவ்வித எழுத்து மூல உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஊ)	1978 திசெம்பர் 19 ஆந் திகதிய திறைசேரிச் சுற்றறிக்கையின் 842 ஆம் இலக்கம்	ரூபா 540,536,673 பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் வீதியின் உட்கட்டமைப்பு விடயங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் பதியும் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட வகைப்படுத்தலை ஏற்படுத்துதல், சொத்துக்களை இனங்காணல், கணக்கீடு செய்தல் மற்றும் அவற்றின் நிருவாகத்தை இலகுபடுத்தும் வகையில் அந்தப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
(எ)	2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.2.2 மற்றும் 3.4 ஆம் பிரிவுகள் மற்றும் கொள்வனவுக் கைநூலின் 2.14.1 ஆம் பிரிவு	சந்தை விலை மாற்ற முறைமையின் படி கேள்வி கோரலின் ஆகக் குறைந்த கால எல்லை 7 நாட்களாக இருந்த போதிலும் நிதியத்தின் ஊழியர்களுக்காக 1200 ரீஷேட்டுக்களை கொள்வனவு செய்யும் போது முதலாவது தினத்திலே கூறுவிலை பெறப்பட்டிருந்தது. மேலும் 5 கேள்விதாரர்களுக்கு குறையாத எண்ணிக்கையில் கூறுவிலை கோரப்பட வேண்டிய போதிலும் 3 நிறுவனங்களில் இருந்து மாத்திரம் கூறுவிலை கோரப்பட்டிருந்தது.

2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அகழ்வு மற்றும் பாதுகாத்தல் செயற்பாடுகளைப் போல அகழ்வுகளின் போது கிடைக்கின்ற தொல்பொருட்களை தம்வசம் வைத்துக் கொள்வதற்காகவும் மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் மூலம் அதிகாரம் கையளிக்கப்படாமலிருந்த போதிலும் தொல்பொருட்களை அகழ்தல் மற்றும் பாதுகாத்தல் செயற்பாடுகளுக்கான நேர் மூலப்பொருள் மற்றும் நேர் உழைப்பு ஈடுபடுத்தியதற்காக மத்திய கலாசார நிதியத்தினால் மீளாய்வாண்டின் போது ரூபா 434,518,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 7 ஆவது பிரிவின் பிரகாரம் கலாசார நடவடிக்கைகள் விடயப் பொறுப்பு அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் உத்தியோகபூர்வமாக நிதியத்தின் பிரதான நிருவாக உத்தியோகத்தராவார். இந்த பதவிக்காக படியொன்றைச் செலுத்துவதற்காக அதிகாரச்சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்படாதிருந்த போதிலும், நிதியத்தால் செயலாளரின் மாதாந்த

சம்பளத்தில் 33 1/3 தொகையான மாதாந்தப்படி ஒன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா 241,356 ஆகும். இதற்கான தாபன விதிக்கோவை மற்றும் பொது நிதிச்சுற்றறிக்கை என்பவற்றின் படி நிறுவனப் பணிப்பாளரினதும் திறைசேரியினதும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

03. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டின் நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்து ரூபா 302,069,092 மிகையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அதற்கு நேரொத்த மிகையான ரூபா 227,294,733 தொகையுடன் ஒப்பிடு செய்த போது நிதி விளைவுகளில் ரூபா 74,774,359 தொகையான முன்னேற்றத்தைக் காண்பித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது நிதியத்தின் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 314,812,779 இனால் அதிகரித்திருந்த போதிலும், அதற்கு முரணாக சுற்றுலா நுழைவுச் சீட்டு விற்பனை வருமானம் ரூபா 399,664,799 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுற்றுலா நுழைவுச்சீட்டு விற்பனை தொடர்பாக அந்த நுழைவுச் சீட்டு அச்சிடல் செலவினம் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 56,299,899 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது இது ரூபா 4,189,480 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவினம் 92.56 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. 2012 ஆம் ஆண்டில் அச் செலவினம் அதற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2291 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் சுற்றுலா நுழைவுச் சீட்டு அச்சிடலுக்காக முறையான முறைமையொன்று அறிமுகப்படுத்தாமையின் காரணமாக அச் செலவினங்கள் வருடாந்தம் பாரியளவில் தளம்பல்களுக்குள்ளாகியிருந்தது.

(ஆ) நிதிச் செயலாற்றல் கூற்றின்படி ஏனைய கலாசார செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட பணம் ரூபா 62,345,256 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அந்தச் செலவினங்கள் அதிகரிப்பு ரூபா 29,429,621 தொகை அதாவது 89 சதவீதமாக இருந்தது. விகாரைகளை

நவீனமயப்படுத்துதல் மற்றும் பெரெஹெராவிற்காக அனுசரணை உதவிகளை வழங்கும் போது அதற்கான நியதிகள், முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படாமையாலும் பாதீட்டுக் கட்டுப்பாடு காணப்படாமையின் காரணமாகவும் இச் செலவின அதிகரிப்புத் தொடர்பில் தாக்கமளித்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் ரூபா 35,313,462 இனால் அதிகரித்தமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 112 சதவீதமாக இருந்தது. கணிப்பீட்டு வழுக்கள் இவ்வாறு அதிகரித்தமை தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

3.3 நிறுவனத்திற்கு எதிராக உள்ள சட்டவிடயங்கள்

கட்டளையின் பிரகாரம் பணிகள் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் தங்களுக்கு அறவிடப்படவேண்டிய ரூபா 379,137 தொகை செலுத்தாமை தொடர்பாக அப்பணத்தை அறவீடு செய்வதற்காக வெளி கம்பனியொன்றினால் நிதியத்திற்கு எதிராக 2010 ஆம் ஆண்டின் போது வழக்குத் தொடரப்பட்டிருந்தது. மேலும் நிதியத்திற்குரிய வாகனமொன்றின் மூலம் ஏற்பட்ட விபத்தால் ஏற்பட்ட நட்டமாக ரூபா 500,000 தொகை நட்டஈடுகோரி வெளித்தரப்பினரால் 2004 ஆம் ஆண்டின் போது நிதியத்திற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அமுல்படுத்தப்படாத பணிகள்

(i) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யும் எதிர்பார்ப்புடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்ட 11 அகழ்வு வேலைத்தளங்களின் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 6,973,555 தொகையான 2305 வேலை அலகுகளும், 18 பாதுகாத்தல் வேலைத்தளங்களின் மதிப்பீட்டுக் கிரயமான ரூபா

(அ) மத்திய கலாசார நிதியத்தின் பிரதான வருமான வழியான சுற்றுலா நுழைவுச் சீட்டுக்கள் விற்பனையின் மூலம் மீளாய்வாண்டின் போது கிடைத்த வருமானம் ரூபா 1,748,439,894 ஆகும். எவ்வாறாயினும் நுழைவுச் சீட்டுக்கள் அச்சிடும் போது தெளிவான மாதிரிகள், போதியளவான பாதுகாப்பு முறைமை மற்றும் இருப்புக் கட்டுப்பாட்டிற்காக முறையான திட்டமொன்றும் அறிமுகப்படுத்தப்படாமையின் காரணமாக நுழைவுச்சீட்டு அச்சிடல், இருப்பினைப் பேணுதல் மற்றும் விற்பனை என்பவற்றில் உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் எழுந்திருந்தது. இலத்திரனியல் பார்கோட் முறைமை (Bar Code System) போன்ற நவீன தொழில்நுட்ப முறைமையொன்றை பயன்படுத்தி அதனை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தின் 2013 – 2016 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தின் தயாரிக்கும் செயற்பாடுகள் ரூபா 600,000 இற்கு திறன் அபிவிருத்தி நிதியத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2012 ஒக்தோபர் 10 ஆந் திகதி செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அத்திகதி முதல் 6 வாரங்களுக்குள் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் அது 2013 மே 13 ஆந் திகதிய கையளிக்கப்பட்டிருந்தது. தாமதக் கட்டணத்தைக் கழிப்பதற்காக உடன்படிக்கையில் நிபந்தனை உள்ளடக்கப்படாமை நிதியத்திற்கு பாதகமானதாக இருந்தது.

4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) தொல்பொருளியல் அகழ்விற்கான அங்கீகாரம்

(i) தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் 06 மற்றும் 07 ஆம் பிரிவுகளின் படி தொல்பொருள் அகழ்வு மேற்கொள்வதற்கு முன்னர் அகழ்வு நிலம் தொடர்பான சகல தகவல்களும் சமர்ப்பிக்கப்பட்டு தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அனுமதிப்பத்திரம் ஒன்று பெறப்படவேண்டிய போதிலும் நிதியத்தால் மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 10 அகழ்வு செயற்திட்டங்களுக்கான வேலைத் திட்டம் தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்காக 2013 யூன் 30 ஆந் திகதியே அனுப்பப்பட்டிருந்தது.

(ii) மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் அகழ்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட சகல தொல்பொருள் தொடர்பான அறிக்கையைப் போன்றே அகழ்வு தொடர்பான அறிக்கையும் தயாரிக்கப்பட்டு தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அகழ்வுகளின் போது கண்டறியப்பட்ட விஷேட தொல்பொருட்கள், தொல்பொருளியல் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான கையளித்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பொருட்கள்

அபயகிரி மற்றும் ஆலாஹன செயற்திட்டங்கள் மூலம் 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட 3040 GI குழாய்களையும், 4493 மூடிகளையும் மீளப்பெற்றுக்கொள்வதற்கு 2014 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கைதவிர்க்கப்படாத சொத்துக்கள்

2013 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டதன் படி நிதியத்திற்குச் சொந்தமாகப் பேணப்பட்ட உடைந்த 9 வாகனங்கள் மற்றும் 2 மோட்டார் சைக்கிள்கள் 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பாதுகாப்பற்ற வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ அல்லது பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ 2014 யூலை 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மதியுரையாளர்களைச் சேர்த்தலும் அவர்களின் சேவையும்

நிதியத்தின் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட மதியுரை பணிப்பாளருக்கும் 14 கட்டிடக் கலை மதியுரையாளர்களுக்குப் படியாக ரூபா 2,396,824 தொகை அண்ணளவாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவர்களால் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் மற்றும் தாம் அறிக்கை சமர்பிக்க வேண்டிய முறை

தொடர்பாக அவர்களுக்கு விளக்கமான ஆலோசனை வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் படி நிரந்தர மாதாந்த படியொன்றையும் எரிபொருள் படியொன்றையும் பெற்றுக்கொண்டு அவர்கள் ஆற்றிய சேவைகள் எவ்வாறானது என கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை.

4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

(அ) பொலன்னறுவை புனித பூமியில் உள்ளக வீதிகளை மீளமைப்புச் செய்தல்

பொலன்னறுவை புனித பூமியில் வெளியேறும் வாயிற்கதவு முதல் உள்ளக வீதியில் 01 கி.மீற்றருக்கு சீமெந்து கொங்கிரீட் கற்கள் இட்டு அபிவிருத்தி செய்யும் ஒப்பந்தம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 27,500,000 தொகையில் கையளிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்ட தொகை ரூபா 29,235,510 ஆகும். இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஆரம்ப கிரய மதிப்பீடொன்று விளக்க மாதிரிகளுடன் தயாரிக்கப்பட்டு வழங்கப்படாதிருந்த போது அங்கீகாரமின்றி வீதியின் அகலம் 4.5 மீற்றர் முதல் 6.2 மீற்றர் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும் நியமத்திற்குப் புறம்பாக நிர்மாணிக்கப்பட்டதன் காரணமாக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 48,575,893 வரை அதிகரித்திருந்ததுடன் அதற்காக கொள்வனவுக் குழுவின் அங்கீகாரமும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) வீதியில் இடப்பட்டிருந்த கொங்கிரீட் கற்கள் குறிப்பிடப்பட்ட நியமத்தை விட குறைந்த தரமுடையதாக இருந்தும் அக்கற்களுக்காக நிதியத்தால் ரூபா 16,992,545 தொகையான மொத்தப் பணமும் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் பட்டியல்களுக்காக கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் நிர்மாணங்களின் தரம் தொடர்பான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) உடன்படிக்கையின் படி 90 நாட்களில் நிர்மாணம் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் 652 நாட்கள் கடந்திருந்தும் செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்த விலை மற்றும் அளவுகளில் முரண்கள், தாமதக்கட்டண அறவீடு

மற்றும் நியமங்களுக்குப் புறம்பாக நிர்மாணித்தல் தொடர்பான ஏற்பாடுகள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாமையால் நிதியத்திற்கு பாதகமாக இருந்தது.

(ஆ) வ/ப கலாசார பாதுகாப்பு மற்றும் நிர்மாணக் கம்பனியிலிருந்து ஊழியர்களைப் பெறல்

நிதியத்தின் செயற்திட்டங்களின் சேவைக்காக பயிற்சி பாதுகாப்பு/ அகழ்வு உதவியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்காக மீளாய்வாண்டிற்காக வ/ப கலாசார பாதுகாப்பு மற்றும் நிர்மாண தனியார் கம்பனிக்கு ரூபா 114,879,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கம்பனியை உருவாக்கும் அமைச்சரவைப் பத்திரம் மற்றும் அதற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தின் படி மத்திய கலாசார நிதியத்தின் ஊழியர்கள் அந்த கம்பனியின் மூலம் சேவையில் ஈடுபடுத்தி அவர்களின் சம்பளத்தை கம்பனியின் மூலம் செலுத்துவது நோக்கமாக இருந்த போதிலும் அதற்கு முரணாக கம்பனியின் ஊழியர்களுக்கு நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) உடன்படிக்கையின் 1 ஆவது பிரிவின் படி ஊழியர்கள் வடமேல் கலாசார சதுக்க செயற்திட்டங்களில் அகழ்வு/ பாதுகாப்பு உதவியாளர்களாக சேவையில் ஈடுபடுத்த வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக ஏனைய செயற்திட்டங்களைப் போன்றே செயற்திட்ட அலுவலகங்களிலும் அவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(iii) உடன்படிக்கையின் படி நாளொன்றுக்காக பெறப்படுகின்ற மனித ஊழியத்திற்காக நிதியத்தின் மூலம் அக்கம்பனிக்கு ரூபா 1,200 செலுத்தப்பட்டிருந்த போதிலும் கம்பனியால் ஊழியர்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 700 மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. இதன் படி 2013 சனவரி முதல் திசெம்பர் வரை பெறப்பட்ட 95,732 மனித நாட்களுக்காக ஒரு ஊழியருக்கு நாளொன்றிற்கு ரூபா 500 படி ஆண்டின் போது ரூபா 47,866,000 இலாபத்தை உழைப்பதற்கு கம்பனிக்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(iv) செயற்திட்டங்களின் தேவைக்கு மேலதிகமாக ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. உதாரணமாக பண்டுவஸ்நுவர செயற்திட்டத்தின் மிகை ஊழியத்திற்காக ரூபா 4,046,225 தொகையும், ரிதீ விகாரை செயற்திட்டத்தில் ரூபா 8,094,003 தொகையும் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பணிப்பாளர் நாயகத்தின் நியமனமும் சம்பளக் கொடுப்பனவும்

(i) 2012 ஒக்தோபர் 03 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் தீர்மானத்தின்படி பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருக்கின்ற தற்போதைய பணிப்பாளர் நாயகத்திற்குப் பதிலாக நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தரொருவர் இது வரையிலும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பணிப்பாளர் நாயகப் பதவியின் பதில் கடமைக்காக பதில் கடமை சம்பளத்திற்குப் பதிலாக தொல்பொருளியல் பேராசிரியருக்கு நிரந்தர பதவியின் சம்பளம் நிதியத்தால் செலுத்தப்பட்டிருந்தது. அதன் படி மாதாந்தம் ரூபா 162,706 வீதம் மீளாய்வாண்டிற்கான சம்பளமாக ரூபா 1,952,468 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) இந்த உத்தியோகத்தரின் நிரந்தர பதவியின் சம்பளத்திற்குரிய கற்கைப் படிகள் (Academic Allowance) மற்றும் ஆராய்ச்சிப்படிகள் (Research Allowance) மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பதவிக்குரித்தற்றதாக இருந்த போதிலும் தொடர்ச்சியாக நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்ததுடன் சம்பளத்தில் உள்ளடக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட அப்படிகளின் மொத்தம் ரூபா 824,003 ஆகும்.

(ஈ) சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான நியமனம்

(i) போட்டி விண்ணப்பங்கள் கோரப்படாமல் மத்திய கலாசார நிதியத்தில் சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக 2013 யூன் 01 ஆந் திகதி முதல் புதிய உத்தியோகத்தரொருவர் ஒப்பந்த அடிப்படையில்

நியமிக்கப்பட்டிருந்தார். அந்த உத்தியோகத்தருக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் படி காணப்பட வேண்டிய தகைமை காணப்படாதிருந்த போதிலும் சட்ட உத்தியோகத்தர் பதவிக்குரிய சம்பளத் தொகுதியின் ஆரம்பச் சம்பளத்துடன் அரசாங்கத்தினதும் மத்திய கலாசார நிதியத்தினதும் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளையும் உள்ளடக்கி 2014 மே 31 வரையில் செலுத்தப்பட்ட மொத்தச் சம்பளம் ரூபா 422,786 ஆகும்.

(ii) 2014 மே 31 ஆந் திகதியில் சேவைக் காலம் முடிவடைகின்றமையால் விண்ணப்பம் கோரி தகுதியான ஒருவர் நியமிக்கப்படும் வரை ஒரு வருட காலத்திற்காக மாத்திரம் அவரின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு வழங்கப்பட்ட ஆளுநர் சபையின் அங்கீகாரத்திற்கு முரணாக பணிப்பாளர் நாயகத்தால் அவரின் சேவைக்காலம் மேலும் 02 வருடங்களுக்காக நீடிக்கப்பட்டு முன்னர் போன்றே சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) நிதியத்திற்காக வாகனங்களைக் கொள்வனவு செய்யும் போது, அங்கீகரிக்கப்பட்ட செலவின எல்லை தொடர்பாக தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2011 மார்ச் 25 ஆந் திகதிய BD/NI 177/2/9/02/CCF ஆம் இலக்க கடிதத்தின் படி பணிப்பாளர் நாயகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட எல்லை ரூபா 4.5 மில்லியனாக இருந்த போதிலும் அந்த எல்லையை விஞ்சி ரூபா 2.48 மில்லியன் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. மேலும் பணிப்பாளர் (நிதி) மற்றும் செயற்பாட்டுப் பணிப்பாளர் ஆகியோருக்காக 2 வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்திராத போதும் அதற்காக ரூபா 15.8 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) பிரிவென்வெல ஓலைச்சுவடி ஆவணங்களை அபிவிருத்தி செய்வதற்காக யாபஹுவ செயற்திட்டத்திற்கு நியமிக்கப்பட்ட ஓலைச்சுவடி கற்பிப்பாளருக்கு மாதாந்தம் ரூபா 20,000 படியொன்றும் 100 லீற்றர் பெற்றோலும் மீளாய்வாண்டிற்காகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஓலைச்சுவடி ஆவணங்களை அபிவிருத்தி செய்வதற்காக அவர் நிறைவேற்றிய கடமைகள் என்ன என்பது தொடர்பாக கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

4.5 வெளிப்படையான மோசடிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு சுற்றுலா நுழைவுச் சீட்டுக்களுடன் இலவசமாக வழங்குவதற்காக DVD வழங்குதல்

வெளிநாட்டு சுற்றுலா நுழைவுச் சீட்டுக்களுடன் இலவசமாக வழங்குவதற்காக சீகிரிய, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் போன்ற புனித தலங்களை உள்ளடக்கிய 5 இலட்சம் DVD களை தயாரித்து வழங்குவதற்காக ரூபா 51,099,925 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) உரிய ஒப்பந்தக்காரரால் இதற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் சீகிரியவை உள்ளடக்கிய பதிவு செய்யப்பட்ட திரைப்படங்களின் காட்சிகளை கணனிப் பிரதிகளில் மீளத் தயாரித்து புதிய வடிவமைப்புடன் மோசடியான வகையில் இந்த DVD படங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ii) DVD தயாரிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்வி நியாயமான காரணமின்றி கவனத்தில் கொள்ளாது ஆகக்கூடிய கேள்வி தெரிவு செய்யப்பட்டமையால் நிதியத்திற்கு ரூபா 18,125,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(iii) ஒப்பந்தக்காரரால் இந்த பாடவிடயங்கள் தொடர்பாக இதற்கு முன்னர் வழங்கிய ஒப்பந்தத்திற்குரிய ரூபா 4,701,000 தொகையான உடன்படிக்கையொன்று மீறப்பட்டிருக்கும் போதும் அச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முன்னர் அவர்களுக்கு பெறுமதிசேர் வரியுடன் (VAT) முழுத் தொகையான ரூபா 5,191,150 தொகையான கொடுப்பனவு தொடர்பாக முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளிலும் விடயங்கள் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அந்த விடயங்கள் கருத்தில் கொள்ளப்படாது தவிர்க்கப்பட்டிருந்தது.

(iv) உடன்படிக்கையில் கைச்சாத்திடும் போது தாமதக் கட்டணம் மற்றும் பெறுமதி சேர் வரிக் (VAT) கொடுப்பனவுகளுக்குரிய நிபந்தனை ஒப்பந்தக்காரருக்கு சாதகமான முறையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே கேள்விப் பிணை மற்றும் செயலாற்றல் பிணைகள் முறையே ரூபா 446,250 தொகை மற்றும் ரூபா 2,281,250 தொகையாக குறைவாகப் பெறப்பட்டிருந்தது.

(v) கிரய மதிப்பீடு தயாரித்தல், மாதிரிகளைத் தயாரித்தல் மற்றும் அதன் பிரகாரம் கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல் விஷேட நிபுணத்துவம் உடைய மதியுரையாளரால் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் கொள்வனவு ஆவணங்கள் விஷேட நிபுணத்துவம் உள்ள தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் தயாரிக்கப்பட்டு கையளிக்கப்பட்ட DVD தகைமையுள்ள தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றின் பரிசீலனைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) ஒப்பந்தக்காரர் பெறுமதி சேர் வரியைச் செலுத்துவதற்காக போலியாக வரி இலக்கமொன்றை விலைப்பட்டியல்களில் உள்ளடக்கி நிதியத்திலிருந்து மோசடியாக பெறுமதி சேர் வரியாக ரூபா 5,474,999 தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவிக்கான நியமனமும் படிக் கொடுப்பனவும்

மத்திய கலாசார நிதியத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடங்காததும் மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்படாததுமான செயற்பாட்டு பணிப்பாளர் பதவிக்காக 2006 ஆம் ஆண்டின் சனவரி முதல் உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டு அத்திகதி முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் வரை மாதாந்த படியாக ரூபா 4,494,105 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(i) நிதியத்தின் உள்ளபடியான பதவியணியினரில் பணிப்பாளருக்கு உரித்தான சம்பளத் திட்டத்தில் ஆகக்கூடிய சம்பளப் படி நிலையில் ஒரு சம்பள ஏற்றத்திற்குக் குறைவாக மாதாந்தப் படியொன்று அவருக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 2009 மே 26 ஆந் திகதிய 39

ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் படி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) இந்த உத்தியோகத்தர் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் பணிப்பாளராக நிரந்தர பதவியிலும் கடமையாற்றி அந்த நிறுவனத்திலிருந்தும் முழுமையாகச் சம்பளம் மற்றும் படிகளாக மேற்கூறப்பட்ட காலப்பகுதியில் ரூபா 5,076,836 தொகை பெற்றிருந்தார். மேலும் மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளருக்கு உரித்தான சகல வரப்பிரசாதங்களைப் போலவே அரசாங்க சேவை சம்பள அதிகரிப்புக்களின் போது நிதியத்தின் படியையும் அதே விதத்தில் அதிகரித்து நிலுவைத் தொகையுடன் பெற்றிருந்தார்.

(iii) 2006 முதல் மீளாய்வாண்டு வரை மத்திய கலாசார நிதியத்தால் ஒதுக்கப்பட்ட 2 வாகனங்களை அவ்வப்போது பயன்படுத்தி மாதாந்தம் 120 லீற்றர் படி எரிபொருள் படியும் பெற்றிருந்தார். மேற்கூறப்பட்ட காலப்பகுதியில் பெறப்பட்ட எரிபொருள் படி ரூபா 949,618 ஆக இருந்தது. அந்தக் காலத்திற்காக தொழிற்பயிற்சி அதிகாரசபையிலிருந்தும் ஒதுக்கப்பட்ட வாகனமொன்றிற்கும் மாதாந்த எரிபொருள் படியைப் பெற்றிருந்தார்.

(இ) கிரவல் கொள்வனவு – சீகிரிய செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சீகிரிய செயற்திட்டத்தில் உள்ளக வீதிகளைத் திருத்துவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,718,125 தொகையில் கிரவல் கொள்வனவு செய்வதற்காக கேள்விச் சபை அங்கீகாரமின்றி பதிவு செய்யப்படாத வழங்குனருக்கு கூறுவிலை கோரல் கடிதம் அனுப்பி வெளிப்படையாக அன்றி வழங்குனர் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

(ii) கேள்வி ஆவணக் கட்டணம் மற்றும் கேள்விப் பிணை சமர்ப்பிக்காத வழங்குனரின் கேள்வியும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு ரூபா 718,125 பெறுமதியான கேள்வியொன்று கேள்விப்பிணை சமர்ப்பிக்காத

வழங்குனருக்கும், ரூபா 500,000 தொகையான கேள்வியொன்று, கேள்வி ஆவணக் கட்டணம் சமர்ப்பிக்காத வழங்குனருக்கும் கையளிக்கப்பட்டிருந்தன.

(iii) இந்த கூறுவிலை பெறும்போது, மீளாய்வாண்டில் மாத்தளை மாவட்ட விலைக்குழுவின் விலையின் படி 1 கியூப் கிரவலின் விலை ரூபா 1,000 ஆக இருந்த போதிலும் 1 கியூப் ரூபா 1,875 படி 383 கிரவல் கியூப்களும், 1 கியூப் ரூபா 2,000 படி 500 கியூப்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. பிரதேசத்தில் காணப்படுகின்ற விலைகளை மிகைத்து கிரவல் கொள்வனவு செய்யப்பட்டமை காரணமாக நிதியத்திற்கு ரூபா 835,125 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 253,950 பெறுமதியான 135.44 கியூப் கிரவல் எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் 1½ வருட காலம் பாதுகாப்பதற்ற களஞ்சியத்திற்கு அருகில் வைக்கப்பட்டிருந்ததுடன் அது கேள்வி மாதிரிகளில் குறிப்பிடப்பட்ட நியமங்களுக்கு இல்லாதிருந்தமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) பணிப்பாளர் நாயகத்தின் வாகனப் பாவனை

(i) 2013 சனவரி முதல் 2014 ஆகஸ்ட் வரையான காலத்திற்காக நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனம் ஓட்டப்படாத 5929 கிலோ மீற்றருக்காக ஓடியதாக போலியாகப் குறிப்புக்களை இட்டு ரூபா 137,214 பெறுமதியான 847 லீற்றர் எரிபொருள் மோசடியாகப் பெறப்பட்டிருந்தது. 2014 ஆகஸ்ட் 22 ஆந் திகதியில் உள்ளவாறு வாகனத்தின் மைலோ மீற்றர் 111,476 கி.மீற்றராக இருந்த போதிலும் ஓட்டக் குறிப்புக்களில் 117,405 கி.மீற்றர் ஓடப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) மேலும் மேற்கூறப்பட்ட உத்தியோகபூர்வ வாகனம் அவர் வெளிநாட்டில் இருந்த காலப்பகுதியில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டு அவரின் மனைவியின் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்தது. அந்தக் காலப்பகுதியில்

1795 கி.மீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்தி 297 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது.

4.6 நோக்கத்திற்கு முரணான செலவினம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சனாதிபதி பதவிப் பிரமாணத்தின் 2 ஆவது நிகழ்விற்காக வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்காக பத்திரிகை அறிவித்தல் கட்டணம் ரூபா 351,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ரோயல் ஆசிய சங்கம் என்ற பெயரிலுள்ள வெளி தனியார் நிறுவனத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட கலைச் சம்மேளனத்திற்காக அனுசரணைப் படியாக நிதியத்தால் ரூபா 400,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

4.7 இனங்காணப்பட்ட நட்டம்

ஒப்பந்த உடன்படிக்கையின் படி முற்பணம் பிணைகள் மற்றும் செயலாற்றல் பிணைகள் இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அறவிடப்படவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நிதியம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2000 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளின் போது 2 தனியார் கம்பனியிலிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 1,705,055 தொகை அந்த வருடங்கள் முதல் தீர்க்கப்படாத முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இதற்காக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்ததன் பின்னர் ரூபா 4,472,150 தொகை நிதியத்திற்குச் செலுத்துமாறு ஒரு கம்பனிக்கு நீதிமன்றத்தின் மூலம் 2011 ஆம் ஆண்டின் போது கட்டளையிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் அதனை அறவீடு செய்ய முடியாதிருந்தது.

4.8 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிதியத்தின் வளங்கள்

(அ) பொது முயற்சிகளின் நிதி வளங்கள் உள்ளடங்களாக ஏனைய வளங்கள் மேற்பார்வை அமைச்சின் பயன்பாட்டிற்காக வழங்க முடியாதிருந்த போதிலும் 1989, 2000, 2001 மற்றும் 2011 ஆண்டுகளில் கலை, கலாசார அலுவல்கள் அமைச்சின் சேவைக்கு விடுவிக்கப்பட்ட மத்திய கலாசார நிதியத்தின் பதவியணியினருக்குரிய 07 உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் போதும் அமைச்சின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவர்களுக்காக நிதியத்தால் செலுத்தப்பட்ட மொத்தச் சம்பளங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,286,205 ஆகும்.

(ஆ) மத்திய கலாசார நிதியத்தின் பிரதி பணிப்பாளர் நாயகம் பதவியில் 2013 ஆம் ஆண்டின் போது பதில் கடமையாற்றிய கலை, கலாசார அலுவல்கள் அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளருக்கு வழங்கப்பட்ட ரூபா 110,847 பெறுமதியான நோட்புக் கணனி அவர் கலை, கலாசார அலுவல்கள் அமைச்சிலிருந்து 2013 செப்தெம்பர் 03 ஆந் திகதி முதல் இடம் மாற்றலாகிச் சென்ற போதிலும் 2014 ஆகஸ்ட் 25 ஆந் திகதி வரையிலும் அது மீளப் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) மத்திய கலாசார நிதியத்திற்குச் சொந்தமான கெப் வாகனமொன்று மீளாய்வாண்டின் மே முதல் செப்தெம்பர் வரை முழுமையான காலப்பகுதியில் கலை, கலாசார அலுவல்கள் அமைச்சரின் பதவியணியினரின் பாவனைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அக்காலத்திற்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

4.9 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் அநேகமான பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் பதில்கடமை/ கடமைகளை நிறைவேற்றல் அடிப்படையில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 74 ஆகும். அதற்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட பதில் கடமை/ கடமைகளை நிறைவேற்றல் படிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,187,644 ஆக இருந்தது.

(ஆ) தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்து நிதியத்தால் வெற்றிடப் பதவிகளுக்காக தொடர்ச்சியாக பதில்கடமை/ கடமைகளை நிறைவேற்றல் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் 01 வருடம் முதல் 06 வருடங்கள் வரையிலான காலம் அவ்வாறு கடமையாற்றிக் கொண்டிருக்கின்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 32 ஆகும்.

(இ) 2011 திசெம்பர் 02 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளின் பிரகாரம்

வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை நடாத்தவேண்டிய பதவிக்காக ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒரு முறையேனும் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை நடாத்த வேண்டியிருந்த போதிலும் இது வரையும் எவ்வித வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தற்காலிக அடிப்படையில் அகழ்வு/ பாதுகாப்பு பரிசோதகர்கள் இருவர் மாதாந்த படி ரூபா 45,000 வீதம் கொடுப்பனவு அடிப்படையிலும் 48 பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 20,000 வீதம் மாதாந்த படி கொடுப்பனவு அடிப்படையிலும், பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் பாதுகாப்பு விஷேட நிபுணர், புலனாய்வு உத்தியோகத்தர் என்போருக்காக மாதாந்தம் ரூபா 30,000 மற்றும் ரூபா 25,000 வீதம் படி செலுத்தும் அடிப்படையிலும் உத்தியோகத்தர்களைச் சேர்ப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

4.10 வாகனப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூறுவிலை கோரல் மற்றும் வழங்குனர்களைத் தெரிவு செய்தல் வெளிப்படையாக அன்றி மேற்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டின் போது வாடகை அடிப்படையில் 4 வேன் வாகனங்கள் பெறப்பட்டிருந்தன. அதற்கான மாதாந்த வாடகை ரூபா 50,000, ரூபா 45,000 மற்றும் ரூபா 45,000 ஆக செலுத்தப்பட்டிருந்ததுடன் வாகன வழங்குனர்களுடன் எவ்வித எழுத்து மூல உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாதாந்த வாடகை ரூபா 50,000 தொகையான வேன் வண்டிக்காக மீளாய்வாண்டின் யூலை முதல் திசெம்பர் வரையான காலத்திற்கு வாடகைச் செலவினமாக ரூபா 546,275 தொகை செலுத்தப்பட்டிருந்தது. வாடகை வாகனத்திற்கான மாதாந்த அங்கீகரிக்கப்பட்ட செலவின எல்லை ரூபா 40,000 ஆனமையால் அந்த 6 மாதங்களுக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சிய வாடகைச் செலவினம் ரூபா 306,275 ஆகும். மேலும் வாகனத்தின் உரிமையாளரால் நிறைவேற்ற வேண்டிய சேவை மற்றும் டயர் மாற்றுதல் போன்றவையும் நிதியத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) நிதியத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பான பரீட்சிப்பு 06 மாதங்களுக்கு ஒரு தடவை தகைமைபெற்ற பொறியியலாளரொருவரால் மேற்கொள்ளப்படுவதற்காக நடவடிக்கை எடுக்காமையினால் மீளாய்வாண்டிற்காக ஒட்டுமொத்த நிறுவனத்தின் எரிபொருள் நுகர்வுச் செலவினம் திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டையும் விஞ்சி 22 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

05. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூன் 02 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களுக்காக ஆளுநர் சபையின் முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. ஆளுநர் சபையால் நிதிக்கூற்றுக்களின் பொறுப்பு கையேற்கப்பட்டு அவை அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் ஆளுநர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

5.2 கூட்டிணைந்த திட்டம்

நிறுவனத்தின் தூரநோக்கு மற்றும் இலக்குகளை நிறைவேற்றும் நோக்கத்தை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் 03 வருடங்களுக்குக் குறையாத காலத்திற்காக கூட்டிணைந்த திட்டமொன்று வருடம் ஆரம்பிப்பதற்கு முன்னர் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2013 – 2016 காலப்பகுதிக்குரிய எல்லைக்குரிய கூட்டிணைந்த திட்டத்திற்காக ஆளுநர் சபையின் அங்கீகாரம் 2013 திசெம்பர் 03 ஆந் திகதியே கிடைத்திருந்தது.

5.3 செயல் நடவடிக்கைத் திட்டம்

கூட்டிணைந்த திட்டத்திற்கு இணையாகும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. நிதியத்தால் அந்த ஒவ்வொரு செயற்திட்டங்களிலும் நிறைவேற்றப்படுகின்ற அகழ்வுகள் மற்றும் பாதுகாப்புக்களுக்குரிய வேலைத்திட்டம் செயல்நடவடிக்கைத் திட்டமாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த நிறுவனத்தினதும் செயற்பாடுகளையும் மேவுகை செய்யக்கூடிய வகையில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) 2013 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட திருத்தப்பட்ட பாதீடு ஆளுநர் சபையின் அங்கீகாரத்திற்காக 2013 திசெம்பர் 03 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக ஆளுநர் சபை அங்கீகாரம் 2013 திசெம்பர் 23 ஆந் திகதியே கிடைத்திருந்தது. 2013 ஆம் ஆண்டின் செலவினங்களைச் செய்தல் கட்டுப்பாடின்றி மேற்கொள்ளப்பட்டு ஆண்டின் இறுதியில் திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அதற்கு அளுநர் சபை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட திருத்தப்பட்ட பாதீடு மற்றும் 2013 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் படி உள்ளபடியான வருமானங்களையும் செலவினங்களையும் ஒப்பீடு செய்த போது 22 சதவீதம் முதல் 187 சதவீதம் வரையிலான முரண்கள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. பாதீடு முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

5.5 **தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

பொலன்னறுவை புனித பூமியின் உள்ளக நுழைவு வீதியில் 1 கி.மீற்றர் நீளத்திற்கு சீமெந்து கொங்கிரீட் கற்கள் இட்டு அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகள் ரூபா 38,709,100 தொகையில் ஒப்பந்தக் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டு அதற்காக ரூபா 28,255,312 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2012 இன் எனது அறிக்கையிலும் பின்வரும் குறைபாடுகள் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) உரிய தரத்தைக் கொண்டிராத் கொங்கிரீட் நிர்மாணத்திற்காக ரூபா 22,099,917 தொகை செலுத்தியமை

(ஆ) அளவிடைப்பத்திரங்களின் படி நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக ரூபா 4,660,998 தொகை செலுத்தியமை

(இ) ABC விகிதம் 40 சதவீதமும் கல்தூல் கலவை 50 சதவீதத்திற்கு குறைவாகவும் ஈடுபடுத்தியதன் காரணமாக வீதியை சமப்படுத்த முடியாமை தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை.

06. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தினது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பதவியணியினர் முகாமைத்துவம்

(ஆ) கணக்கீடு

(இ) சுற்றுலா நுழைவுச்சீட்டு அச்சீடும் கையிருப்புக் கட்டுப்பாடும்

(ஈ) கொள்வனவு

(உ) ஒப்பந்த நிர்வாகம்

(ஊ) தொல்பொருள் பாதுகாப்பு நடவடிக்கைகள்

(எ) வாகனப் பயன்பாடு

(ஏ) ஆலோசனைப் பணிப்பாளர்களையும் செயற்திட்டப் பணிப்பாளர்களையும் ஆட்சேர்த்தல்

ஒப்பம்:- டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)